விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | தை 5 | ஜ அவ் 7 | இதழ் 342
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 18-1-1986

# பாதுகாப்புவலயம்

# யாழ்மக்கள் கடும் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் இராணுவ முகாம்களைச் சுற்றி ஆயிரம் மீற்றர் எல்லைக்குள் உள்ள பிரதேசத்தைப் பாதுகாப்பு வலயமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளதை யாழ்ப்பாண மக்கள் பலமாக ஆட்சேபித்து, இந்தஉத்தரவை உடன்வாபஸ்பெறுமாறு கோரியுள்ளனர்.**

யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கத்தை நேற்றுக்காலை சந்தித்த 'மக்கள் குழு'வினர் மேற்படி நடவடிக்கை குறித்து பலத்த ஆட்சேபம் தெரிவித்தனர்.

இக்குழுவில் பேராசிரியர் கு. நேசையா, முன்னாள்யாழ். மேயர் திரு.ஆர்.விசுவநாதன், முன்னாள் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜே ஜி. ஆசீர்வாதம், முன்னாள் யாழ். மேல் நீதிமன்ற பதிவாளர் திரு. வி. சி. பரமநாதன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இக்குழுவினர் நேற்றுக்காலை யாழ் ஆயர் வண, தியோகுப்பிள்ளை ஆண்டகை, யாழ். மேல் நீதியன்ற நீதி தி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி, யாழ். நீதவான் திரு. இ.நாகராசா ஆகியோரையும் சந்தித்து நிலைமையை தெரிவித்தனர்.

பாதுகாப்பு வலயத்தில், யாழ் பஸார் பகுதி வர்த்தக நிலையங்கள் வந்துள்ளது தொடர்பாக இன்று காலை. யாழ். வர்த்தக சங்கத்தின் செயற்குழுவில் ஆலோசிக்கப்படவிருக்கிறது.

யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு எம். பாலசுந்தரம், நேற்றுக்காலை வடமாநில கல்விப் பணிப்பாளருடன் தொடர்புகொண்டு, தற்போதுள்ள நிலைமைபற்றி தெரிவித்தார்.

இம்மாதம் 20ம் தேதி முதல் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், ஊழியர்கள், நலன்விரும்பிகள் சகலரும், கிழக்குப்பக்கத்திலுள்ள புதிய பாதையையே பாவிக்கவேண்டும் என்று மத்திய கல்லூரி அதிபர் வேண்டுகோள்விடுத்தார்.

மாணவர்கள் எவரும் மத்திய கல்லூரி விளையாட்டுமைதானப் பகுதிக்கோ அல்லது, கல்லூரிக்கு முன்பாக உள்ள வீதிக்கோ, மணிக்கூண்டுவீதிக்கோ செல்ல வேண்டாமென்றும். பின்பக்க வாசலையேபாவிக்குமாறும் கேட்டுள்ளார்.

யாழ். நிம்மர் மண்டபத்திலுள்ள பாலர் பாடசாலை [நர்சரி] யின் வாசலையும், வேம்படிப்பக்கமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.வீரசிங்கம்மண்டபத்திலுள்ள அரசாங்க திணைக்கள ஊழியர்களும், பண்ணை ஆஸ்பத்திரி ஊழியர்களும் தங்கள் பாதுகாப்பு ற்றி மேலிடத்திற்கு அறிவித்துள்ளனர்.

யாழ் நீதிமன்ற ஊழியர்கள், புதிய நிலைமையினால் சடமைக்குவர அச்சமடைந்துள்ளனர். தங்கள் நிலைமையை விளக்கிமகஜர் ஒன்று தயாரித்து மேலிடத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர். இதுபற்றியாழ் நீதவான் எஸ். நாகராசாவின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்வது.

பண்ணைபகுதியிலுள்ளவர்கள் அங்கிருந்து வெளியேறிவருகின்றனர். சில குடும்பத்தினர், நேற்று வெளியேறி யாழ் நகர் கல்லூரி ஒன்றில் தஞ்சமடைந்துள்ளனர்,

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகளும், புதியநிலைமை பற்றி அடுத்தவாரம் கூடி ஆலோசிக்கவிருக்கின்றனர்கள்.

(8ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி யோசனை அரசு பரிசிலனை

(கொழும்பு)

இனப்பிரச்னை தீர்வு சம்பந்தமாக தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த மாற்று யோசனைளை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

இது சம்பந்தமான இலங்கை அரசாங்கத்தின் கருத்து இம்மாத இறுதிக்குள் இந்தியாவுக்குத் தெரிவிக்கப்படும். [ச]

## யாழ். ரயில்நிலையத்தில் மணியோடருக்கு பயணசீட்டுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்தேவி, இன்ரசிற்றி ரயில்களுக்கான பிரயாணச் சீட்டுக்கள் யாழ். புகையிரத நிலயத்தில் மணியோடருக்கு வழங்கப்படுகிறது.

யாழ்தேவி, இன்ரசிற்றி ரயில்களுக்கான பிரயாணச் சீட்டுக்கள் யாழ்.பொலிஸ் நிலைய வளவிலுள்ள மக்கள் வங்கிக் சட்டிடத்தில் நேற்று முதல் பணக்கொடுப்பணவுக்கு வழங்கப்பட்டுவருகிற போதிலும் யாழ்.புகையிரநிலையத்தில் பயணச்சீட்டுகள் மணி ஓடருக்கும் வழங்கப்படுகிறது.

# கூட்டணி அச்சம்

## ராஜீவுக்கு கோரிக்கை

(சென்னை)

''யாழ். குடாநாட்டிலுள்ள இராணுவமுகாம்களைச் சுற்றிலும் ஒரு கிலோ மீற்றர் (ஆயிரம் மீற்றர்) தூரப்பகுதியை பந்தோபஸ்து மண்டலமாக பிரகடனப்படுத்தப்போவதாக இலங்கை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை; ஒன்றும் அறியாத தமிழ்மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகுவதற்கு வழிவகுத்துள்ளது! அதே நேரத்தில் நாட்டின் பந்தோபஸ்து படையினர் பெரும் ஆயுதங்களை உபயோகிக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

இவ்வாறு; யாழ். குடாநாட்டில் இராணுவ முகாம்களைச்சுற்றிலும் ஒரு கிலே மீற்றர் தூரப்பகுதியைப் பந்தோபஸ்து மண்டலமாக இலங்கை அரசு பிரகடனப்படுத்திய நடவடிக்கை குறித்து தமிழர் விடுதலைக்கூட்டணி இந்தியப் பிரதமர் திரு. ராஜிவ்காந்திக்கு நேற்று அனுப்பியுள்ள அவசர தந்தியொன்றின் கவலை தெரிவித்துள்ளது.

அரசின் இந்தநடவடிக்கை மூலம் ஒன்றுமறியாத அப்பாவித் தமிழ்மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகுவதை தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அத்தந்தியில் வலியுறுத்தியுள்ளனர்,

''அரசின் இந்தநடவடிக்கை. பந்தோபஸ்துபடையினர் ஆயுதங்களை தடையின்றி உபயோகிக்க அனுமதி அளித்துள்ளது. இதனால், வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெருந்தொகையாக வாழும் தமிழ் மக்களின் உயிருக்கும் உடமைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவ்விரு மாகாணங்களிலும் 60இராணுவமுகாம்கள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன இதேவேளை பொதுமக்கள் கொல்லப்படலாமெனவும் வீடுகள் நாசமாக்கப்படலாமெனவும் இலங்கை இராணுவ கமாண்டோக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளது. அப்பாவித் தமிழர்களுக்கு மரணமும் அழிவும் நேரும் என்பதையே இந் நடவடிக்கை குறிக்கும் எனவே விரைந்து இந்நடவடிக்கையை தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை மேற்கொள்ளவும்'' என்று மேற்படி தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழர் விடுதலைக்கூட்டணி ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள தந்தியில்: இலங்கையில் பந்தோபஸ்து மண்டலமாக அறிவிக்கப்பட்ட உத்தரவை ரத்துசெய்யுமாறு கோரியுள்ளதோடு வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவ முகாம்களையும் உடனடியாக கலைத்து விடுமாறு கேட்டுள்ளது. (ச)

குரும்பசிட்டி, குப்பிளான், ஏழாலை

# ராணுவம் சுட்டதில் 4 பேர் பலி! அறுவர் படுகாயம்! இரு வீடுகள் தீக்கிரை!!

(ஏ. வி. மாணிக்கம்)

குரும்பசிட்டி, குப்பிளான் ஏழாலைகிழக்கு ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று வயோதிபர்களும் ஒரு இளம் குடும்பஸ்தரும் பலியானார்கள். ஏழுபேர் படுகாயமுற்றனர். இருவீடுகள் பெற்றோல் குண்டுகள் வீச்சினால் எரிந்துபோய் விட்டன. வீதியோர மதில்கள் இடித்துவீழ்த்தப்பட்டன. சிலவீடுகளின் வேலிகளும் தீவைத்து எரிக்கப்பட்டிருந்தன. வீட்டுயன்னல் கண்ணாடிகள் நொறுக்கப்பட்டு காணப்பட்டன

தேடுதலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருக்கு உதவியாக சிறிய விமானமும் ஹெலிகொப்டரும் வானத்தில் வட்டமிட்ட வண்ணமிருந்தது.

இச்சம்பவத்தின்போது லட்சக்கணக்கான பெறுமதியுள்ள நகைகள், ரொக்கப்பணம் பொருட்கள் காணமல் போனதாக வீட்டு உரிமையாளர்கள் அங்கு விஜயம் செய்திருந்த வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர், கிராமசேவையாளர், பிரஜைகள்குழுத்தலைவர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளனர்.

வ. குமாரவேலு [69-வயது] குரும்பசிட்டியைச் சேர்ந்த இவர், இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா உத்தியோகத்தராவார். இவர் வீட்டுக்குப் பின்பக்கமாக உள்ள வாழைத் தோட்டத்தில் பனைமரத்தினடியில் மறைந்திருந்த பொழுது துப்பாக்கிச் சூடுசள்பட்டது குட்டியர் இரத்தினம்(60வயது) குரும்பசிட்டியைச் சேர்ந்தவர். தமது கடைக்குள் இருந்த பொழுத சுடப்பட்டார். துரை ராஜசிவம் (30வயது) குரும்பசிட்டி ஒருபிள்ளைக்குத் தந்தை சுருட்டுத்தொழில் செயபவர் கதிர்காமு நல்லதம்பி (68 வயது) விவசாயி ஏழாலை வடக்

(8-ம் பக்கம் பார்க்க)

## உருத்திரபுரத்தில் நால்வர் பலி

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் பகுதியில் நேற்று முன்தினம்நடைபெற்ற இராணுவத் தேடுதலைத் தொடர்ந்து இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நால்வர் பலியானர்கள். பலர் காயமடைந்தும் உள்ளனர், சுமார் 100 பேர் கைதானர்கள்.

இச்சம்பவத்தில் சுமார் 300 விவசாயிகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு பலர் விடுதலையானர்கள்.

## 3 இராணுவவீரர் பலி

(கொழும்பு)

கிழக்குமாகாணத்தில்தெஹிவத்தை என்னுமிடத்தில்தீவிரவாதிகளின் நிலக்கண்ணி வெடிக்கு மூன்று இராணுவத்தினர் பலியாகியுள்ளதாக பாதுகாப்புவட்டாரங்கள்தெரிவித்துள்ளன. (ச)

## இணைப்பதிகாரி கூட்டிய மகாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருக்கும் இராணுவ முகாம்களைச் சுற்றி ஆயிரம் மீற்றர் எல்லைக்குள் உள்ள பிரதேசம் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டது சம்பந்தமாக நேற்றுப் பிற்பகல் அரச, கூட்டுத்தாபன, திணைக்கள அதிகாரிகளைக்கொண்ட மகாநாடொன்றை, யாழ். கோட்டைக்குள் யாழ் மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரி நடாத்தினர்.

யாழ். அரசாங்க அதிபர், யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி, மற்றும் சகல வங்கி

(8-ம் பக்கம் பார்க்க)

Lanka Cement Limited
Kankesanturai

**கற்குழியில் இருந்து கல்நொருக்கி இயந்திரத்திற்கு சுண்ணும்புக்கல் ஏற்றி இறக்குதல்.**

கீரிமலைக்கு அருகாமையில் அமைந்துள்ள எமது கற்குழியில் இருந்து (Quarry) தொழிற்சாலையிலுள்ள எமது கல்நொருக்கி இயந்திரத்திற்கு (Crusher) சுண்ணும்புக்கற்களை ஏற்றி இறக்குவதற்காக ரிப்பர், லொறிகள் (Tipper, Lorris) டம்பர்கள் (Dumpers) தேவைப்படுகின்றன.

மேற்படி சேவைக்கு ரிப்பர், லொறிகள், டம்பர்கள் என்பனவற்றை சேவையில் ஈடுபடுத்த விரும்பும் வாகனச்சொந்தக்காரர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்கள் எமது தொழிற்சாலை முகாமையாளரை அவரது காரியாலயத்தில் சந்தித்து வாகனங்களைப் பரிசோதனைக்குட்படுத்தி (Inspection of vehicle) சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஒழுங்குகளைச்செய்யும்படி தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

பொதுமுகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை. (A 63)

# விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், மின் உபகரணங்கள் மற்றும் சாமான்கள் உடன் விற்பனைக் குண்டு. 149, கோவில்வீதி (கோவில் பின் வீதியில்), நல்லூர், யாழ்ப்பாணம். (A92)

காரைநகர் வலந்தலை பண்டித்தாழ்வில் 4½ பரப்பு வீடு வளவு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மா. கந்தசாமி, கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. (C 250)

வெளிநாடு செல்பவரின் வீட்டுத் தளபாடங்கள், சாப்பாட்டு மேசை, அல்மாரி, கபேட்கள், pyrex கிளாஸ் வகைகள், அயன்சேவ், பிள்ளைத் தொட்டில், நாஷனல் மின் விசிறி, றெக்கோட் பிளேயர், பேர்ஷியன் கம்பளங்கள், படுக்கை விரிப்புகள், செவிப்புலன் கருவிகள், English Pressure cooker, அயன்கேற், சூட்கேஸ் வகைகள், பித்தளைப் பாத்திரங்கள் மற்றும் பல பொருட்களும் விற்பனைக் குண்டு. C பத்மநாதன், C/o அம்பலவாணர் (திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவ பீடத்துக்கும் இடையில் அமைந்த இடம்) (C243)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

ஏழாலை மேற்கினைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகன் சிவஞானத்தின் மரணசாதனமில்லாத சொத்துக்கள் தொடர்பான விடயத்தில்,

மரணமெய்தியவர்

வழ. இல: தத்துவம்/257

முருகன் சிவஞானம் கைம்பெண் நாகேஸ்வரி, ஏழாலை மேற்கு, ஏழாலை.

மனுதார்

எதிராக

1. சிவஞானம் மகள் யோகேஸ்வரி - பராயமற்றவர்.
2. கதிரன் சின்னையா இருவரும் ஏழாலை மேற்கு, ஏழாலை.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இறந்தவரின் மரணசாதனமில்லாத சொத்துக்களை நிர்வகிப்பதற்கு மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986-ம் ஆண்டு தை மாதம் 22-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இம்மன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது எனக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 29-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்.

இன்றுமுத்திரையிடப்பட்டது.
என்னால் வரையப்பட்டது.
க. அரியநாயகம்
மனுதாரின் சட்டத்தரணி.
[C 232]

## விற்பனைக்கு

ஆரம்ப விஞ்ஞானம்-ஆண்டு 4-13/- ஆண்டு 5-16/- ஆக்கம் பிரான்சிஸ் ஞானப்பொன்ராஜ் பதிப்பாளர்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [C-112]

நல்ல நிலையில் குறைந்த விலையில் வீடியோ டெக், ரேடியோவுடன் சேர்ந்த இரட்டை கசட் பிளேயர், ஒரே முறையில் 100 கோழிக் குஞ்சுகளைப்பெறக்கூடிய இங்குபேட்டர் விற்பனைக்குண்டு. எல்லா நாட்களிலும் பார்வையிடலாம். இல. 1, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர். (C246)

## சேவை

கொழும்புக்கு வருபவர்களுக்கு ஓர் நற்செய்தி. மீண்டும் உணவுடன் தங்குமிட வசதிகள் சகாய கட்டணத்தில் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். வாக் இன் (Walkinn), 41/1, W. A Silva-Mawatha, வெள்ளவத்தை. [C 194)

## தவறிவிட்டது

புங்குடுதீவைச் சேர்ந்த விசுவநாதி கனகரத்தினம் என்பவரது அடையாள அட்டை தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிங்கப்பூர் போசனசாலை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். [C242)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் நிஷாந்தன் விஜயராசா



கொடிகாமத்தைச் சேர்ந்த விஜயராசா - சியாமளா தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிஷாந்தன் தனது முதலாவது பிறந்த நாளை 18-1-86 சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, சித்திமார், மாமாமார், சித்தப்பாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், சவுதியில் இருந்து சாமிமாமா, பாலுமாமா, டோகா கட்டாறு பெரியப்பா, ஜெர்மன் பிரபா சித்தப்பா, முருகன் அருளால் நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

'உதயகிரி'
கொடிகாமம். C 248

## தொழில் நுட்ப பயிற்சி நெறிகள்

### Technical Courses

1. DRAUGHTSMAN APPRENTICESHIP
2. REFRIGERATION and AIR-CONDITIONING
3. ELECTRICAL WIRING
4. T. V. and RADIO TECHNICIAN COURSE
5. SHORT-HAND and TYPING COURSE (English and Tamil)
6. QUANTITY SURVEYING COURSE

ஆகிய பயிற்சி நெறிகள் 19-1-86ல் ஆரம்பமாகின்றன.

தொடர்பு கொள்க:
REGISTRAR,
**Institute of Technical Studies,**
(V. C. கந்தோர் முன்பாக)
வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

(C 215)

## UNIVERSITY OF JAFFNA
### Sri Lanka.

### Panel of Lawyers

Applications are invited from qualified and experienced Lawyers for undertaking legal work related to University administration.

Kindly apply before 15th of February, 1986 stating details of experience, qualifications and any other relevant particulars to the following address:

REGISTRAR,
University of Jaffna, Sri Lanka,
THIRUNELVELY.

January 9, 1986. (A 78)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கேள்வி அறிவித்தல்

### மதில் கட்டுதல்

இல. 496/4 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பல்கலைக்கழகக் காணியில் மதில் அமைப்பதற்காக தகுதி வாய்ந்த கட்டட ஒப்பந்தக்காரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் குடிசார் பொறியியல் வேலைகளுக்காக யாழ். பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்திருத்தல்வேண்டும். அல்லது ரூபா 150,000வரை/- கட்டடத் திணைக்களத்தில் பதிவுசெய்திருத்தல்வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களின் அளவுகள், மாதிரிப் படங்கள் போன்ற விபரங்கள் பல்கலைக்கழக நிதியாளரிடம் இருந்து22-01-1986ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள முடியும். விபரங்களுக்கான வேண்டுகோளுடன் ரூபா 100/-க்கான தபாற்கட்டளை/காசுக்கட்டளை அனுப்பப்பட வேண்டும். கேள்விகள் விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி 30-01-1986 முற்பகல் 10 மணியாகும். விண்ணப்பக் கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் UJ/F/SK/01/30/01/86 என்ற இலக்கம் குறிக்கப்படவேண்டும்.

பதிவாளர்
(A 91)

## அலங்காரத் திருவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ். கொட்டடி பண்ணை ஸ்ரீ மீனாட்சியம்பாள் ஆலயத்தின் அலங்கார உற்சவத்தின் 17 ம் நாளாகிய இன்று அம்பாளின் அலங்காரத் திருவிழா விசேஷ அபிசேக ஆராதனையுடன் நடைபெறவுள்ளது.

## கோவிற்சுவர் சேதம்

[யாழ்ப்பாணம்]

யாழ்நகரில் நேற்று முன் தினம் நடந்த தாக்குதலின் போது துப்பாக்கிச் சூட்டினால் காங்கேசன்துறை வீதியிலுள்ள கதிரேசன் கோவில் முன் பக்கச் சுவர் சேதமடைந்துள்ளது. இவ் வீதியில்சில கடைக் கதவுகளும் சன்னங்களினால் சேதமடைந்துள்ளது.

## திருமலையிலிருந்து 17 பேர் வந்தனர்

[யாழ்ப்பாணம்]

திருமலை பன்குளம் பகுதியிலேற்பட்ட வன்செயலால் பாதிக்கப்பட்டு வீடு வாசல்களையும் உடமைகளையும் பறிகொடுத்து அகதிகளாக்கப்பட்ட 5 குடும்பங்களைச் சேர்ந்த பதினேழு பேர் யாழ் நகர் வந்தனர்.

இவர்கள் தற்போது சங்கிலியன் புனர்வாழ்வுக்கழக அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுடன் முகாமிலுள்ள அகதிகளின் எண்ணிக்கை 281 ஆக அதிகரித்துள்ளது. [ச]

## ஓர் உருக்கமான வேண்டுகோள்

யாழ்ப்பாணம் இலங்கை வங்கியிலிருந்து இளைப்பாறிய வட்டுக்கோட்டை கிழக்கு திரு. மருதமுத்து மகேசனை 09-01-86 அதிகாலை 5-45 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் ஒரு மோட்டார் வாகனத்தில் கடத்திச் சென்றனர்.

இவர் இருதயநோய், வாதநோய், மூலநோயினாலும் பீடிக்கப்பட்டு இளைப்பாறி தனது இல்லத்திலே தனது கருமங்களையே பார்க்கமுடியாத தேகநிலையிலுள்ளவர். இந்த உண்மையான நிலையை உணர்ந்து கருணை கூர்ந்து மனிதாபிமானத்துடன் இவரை இவரது இல்லத்தில் எதுவித நிபந்தனையும் இன்றிக் கொண்டு வந்து விடுமாறு வேண்டுகிறோம்.

நாங்கள் எல்லோரும் இவரதுவிடுதலைக்குக்கடவுளை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், சுற்றத்தார்,
வட்டுக்கோட்டை.
C 233 சித்தங்கேணி மக்கள்.

## கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு உடனடியாக எமது முகவர்கள் உங்களை அழைத்துச் செல்வார்கள்.

மத்தியகிழக்கு நாடுகளில்
வேலைவாய்ப்பும்
பாஸ்போட், BOND,
விமான ரிக்கட்டுகளும்
உடனுக்குடன் செய்து தரப்படும்.

**GROUP ATLANTIC TRAVELS**
(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
163, Hospital Road, Jaffna.

**15 வருடங்களில் அணு ஆயுதங்கள் 'முடக்கம்!'**

# சோவியத் முடிவுக்கு அமெரிக்க அதிபர் சபாஷ்!

வாஷிங்டன், ஜன-17

**அணு ஆயுதங்களை இன்னும் 15 வருட காலங்களில் பூரணமாக முடக்கி வைப்பதற்கு சோவியத் யூனியன் முடிவுசெய்துள்ளது. இம் முடிவை அமெரிக்க அதிபர் திரு. றெனல்ட் றீகன் வரவேற்றுள்ளார். முன்னைய சோவியத் அரசுகளின் முடிவுகளிலிருந்து இந்த முடிவு பெரிதும் வேறுபட்டுள்ளதாகவும் திரு. றீகன் குறிப்பிட்டுள்ளார்.**

ஜெனிவாவில் நேற்று ஆரம்பமாகியுள்ள சோவியத் - அமெரிக்க ஆயுதப் பரிகரணப் பேச்



சுக்களையடுத்து புதிய யோசனைகளைத் தெரிவிக்கும் வகையிலேயே திரு. கோபச்சேவ் மேற்கண்ட முடிவை வெளியிட்டார்.

சோவியத்தின் இம்முடிவைப் பரிசீலிக்கப்போவதாகவும் திரு. றீகன் அறிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்கப் பாதுகாப்பமைச்சர் திரு. கெஸ்பர் வெயின்பேக்கர் சோவியத்தின் மேற்குறிப்பிட்ட முடிவைப் பரிசீலிக்கப் போவதாக அறிவித்துள்ள போதிலும், அமெரிக்கா சோவியத்தைப் பின்பற்றுது என்று குறிப்பிட்டுள்ளார்.

அணுஆயுத பலத்தை நவீனப்படுத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளதால் பரிசோதனைகளை நிறுத்துவது முடியாத காரியமென்றும்அவர் தெரிவித்துள்ளார். [ ]

**உலகச் செய்திகள்**

## தென் யேமனில் மோதல் நீடிக்கிறது!

ஏடன். ஜன 19

தென் யேமனில், ஆளும் கம்யூனிஸ் அசுக்கும், அரச விரோத கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் தொடர்ந்து கடும்மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. ஏடன்துறைமுகம் மற்றும் விமான நிலையப்பகுதிகளிலேயே மோதல்கள் கடுமையாக இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மோதலில் அநேகர்இறந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது. பெருமளவு கட்டடங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. நீர், மின்சார விநியோகமும் தடைப்பட்டுள்ளன.

இதனிடையே ஏடனில் உள்ள சோவியத் தூதரகத்தில் தெ. யேமன் ஜனாதிபதி அலி நாஸர் மொஹமட்டுக்கும், கிளர்ச்சியாளர்களுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன ஆயினும் இப்பேச்சுவார்த்தைகளில் மோதலை நிறுத்துவதற்கான எவ்வித தீர்வும் காணப்படவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. [செ]

## அகதிகளுக்கான நிவாரணம் இவ்வாரம் நிறுத்தம்

[யாழ்ப்பாணம்]

அரச நிவாரணநிதி மூலமாக திருமலையிலிருந்து பாதிக்கப்பட்டு அங்கிருந்து இடம் பெயர்ந்து வந்து யாழ். அகதிகள் முகாமிலுள்ள அகதிகளுக்கு கடந்த நான்கு மாதங்களாக வழங்கப்பட்ட உணவுப்பொருட்கள் யாவும் இவ்வாரம் முதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அகதிகளின் உணவுப் பிரச்னை முகாம் நிர்வாகிகளுக்கு பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளதாகவும் பொதுமக்களும் பொதுநல ஸ்தாபனங்களும் அகதிகள் விடயத்தில் கருணைகாட்டுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் யாழ் அகதிகள் முகாம் நிர்வாகிகள் இன்றுகாலை யாழ். அரசாங்க அதிபரை சந்தித்து இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். [ச]

## நேரு தங்கக்கோப்பை உதைபந்தாட்டம்

[திருவனந்தபுரம்]

இந்தியாவில் 'நேரு தங்கக் கோப்பைக்'கான சர்வதேச கால்பந்தாட்டப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகின.

சோவியத்யூனியன் உட்பட ஐந்து வெளிநாட்டு அணிகள் இப்பந்தயத்தில் மோதுகின்றன.

கேரள மாநிலத்தில் திருவனந்தபுரம் நகரில் இப்போட்டிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன. [கி]

பாரிஸிலிருந்து—

## தென்னுபிரிக்க இராணுவ அதிகாரி வெளியேற்றம்!

பாரிஸ், ஜன-17

பாரிஸிலுள்ள தென்னுபிரிக்கத் தூதரகத்தின் இராணுவ அதிகாரியை வெளியேறுமாறு பிரான்ஸ் அரசாங்கம் பணித்துள்ளது.

ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகம் தென்னுபிரிக்காவின்மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகளின் ஓரம்சமாகவே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டதையடுத்து பிரான்ஸிற்கான தென்னுபிரிக்கத் தூதுவர் விடுத்துள்ள அறிக்கையொன்றில், தான் இவ்வுத்தரவை எதிர்பார்த்திருந்ததாகவும், ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இவ்வாறான உத்தரவுகளைப் பிறப்பிக்கலாமெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறினர் தமது நாடும் இவ்வாறு வெளியேற்ற உத்தரவுகளைப் பிறப்பிக்கும் நாடுகளுக்கு எதிரானநடவடிக்கைகளை மேற்கொள்ளுமென அவர் மேலும் எச்சரித்துள்ளார்.

தென்னுபிரிக்காவில் பெரும்பான்மை கறுப்பினத்தவர்க்கு எதிராகச் சிறுபான்மை வெள்ளையர்கள் மேற்கொண்டு வரும் இனவெறிக் கொள்கையைப் பல நாடுகளும் எதிர்த்து வருவது தெரிந்ததே. [செ]

## யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் நேற்று முன்தினம் காலை நடந்த தாக்குதல் சம்பவங்களால் காயமடைந்தவர்களில், 13 பேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுளார்கள்.

யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்கள் விபரம் கே. நல்லராஜ் [38 வயது] சிவன் கோவிலடி, யாழ்ப்பாணம், கே. பாலசிங்கம் [40 வயது] யாழ்ப்பாணம், வி. கந்தையா [48 வயது) யாழ்ப்பாணம், வி. வீரசிங்கம் [61 வயது] பெரியகடை யாழ்ப்பாணம், யூசுப் [30 வயது] யாழ்ப்பாணம், மனோகர் [30 வயது] கொக்குவில், கே. கந்தையா [48 வயது] பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம், எஸ்.ரி. தங்கராசா 57 வயது] ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம், பவளன் பெரியகடை யாழ்ப்பாணம், வி. இராசேந்திரம் [37 வயது] நீதிமன்ற வீதி யாழ்ப்பாணம், அருள்சோதி [39 வயது] மானிப்பாய்வீதி யாழ்ப்பாணம், கோபால்ராஜ் [30 வயது] மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம், ரி. செல்வம் [20 வயது] மனோகரா தியேட்டர் அருகில். யாழ்ப்பாணம்.

பரு. சம்பவம்:

## ஆஸ்பத்திரியில் ஒருவர் அனுமதி

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறையில் நேற்றுக் காலை நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வி. மோகன் [20 வயது] காயமடைந்தார்.

பருத்தித்துறை கடற்கரை பக்கமாக இருந்து வந்த துப்பாக்கிச் சூட்டினுல் இவர் காயமடைந்தாராம்.

யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று நண்பகல் இவர் அனுமதிக்கப்பட்டார். [க]

வட அயர்லாந்து

## சிறை உடைப்புக் கைதி ஒல்லாந்தில் கைது!

அம்ஸ்ரடாம், ஜன-17

வட அயர்லாந்திலிருந்து சிறையுடைத்து வெளியேறிய ஐரிஷ் செரில்லாக் கைதி ஒருவர் ஒல்லாந்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மெக்பாலன் என்ற இந்தக் கைதி 1983ம் ஆண்டு வட அயர்லாந்தில் பேஸ் என்ற சிறைக்கூடத்திலிருந்து தப்பி ஓடினுர். இவர் தம்முடன் 40 சக கைதிகளையும் தப்பிக்கச் செய்தார்.

பிரிட்டிஷ், அயர்லாந்து பொலிசார் இக்கைதியின் நடமாட்டத்தை அறிவதில் தீவிரமாக இருந்தனர். ஆயினும் இவர் தமது நாட்டைவிட்டு வெளியேறியிருந்தார். கொலைக் குற்றச்சாட்டுத் தொடர்பாக இவர் ஆயுள் காலச் சிறைத்தண்டனைஅனுபவித்துவந்தார்.

அம்ஸ்ரடாம் பொலிசார் தேடுதல் ஒன்றினையடுத்து இக் கைதியையும், ஜெரால்ட் என்ற இவரது சகாவையும் நேற்றுக் கைதுசெய்தனர்.

இவர்கள் கைதானபோது 40 தன்னியக்க கைத்துப்பாக்கிகளும் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கைதிகளை மீண்டும் பிரிட்டனுக்கு அனுப்புவது பற்றி 'டச்சு' நீதிமன்றில் ஆராயப்பட்டுவருகிறது [கி]

## 9350 மத்திய கிழக்கு கடவுச்சீட்டு விண்ணப்பம்

[சுண்டுகுளி]

யாழ். கடவுச்சீட்டு அலுவலகத்தில் சென்ற ஆண்டு 9350 கடவுச் சீட்டு விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டுள்ளன இதில் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்பவர்களே கூடுதலாக விண்ணப்பித்துள்ளனர்.

இவ்விண்ணப்பங்கள் யாவும் வாரத்தில் இருதடவைகளாக பதிவுப் பார்சல்கள் மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிப்போர் பின்வரும் ஆவணங்களை சரியான முறையில் தவருது சமர்ப்பித்தால் ஒருமாதத்தில் கடவுச்சீட்டுக்கள் உரியவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினுல் அனுப்பி வைக்கப்படும்.

விண்ணப்பகாரர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இருநூறு ரூபா முத்திரை ஒட்டப்பட்டு அவற்றுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப்பிரதி ஒன்று கிராம சேவகரின் நற்சான்றிதழ், மூன்று புகைப்படங்கள், தேசிய அடையாள அட்டையின் போட்டோப் பிரதி ஆகியவற்றை இணைக்கவேண்டும்.

அடையாள அட்டையின் போட்டோப் பிரதியை யாழ் செயலகத்தில் உள்ள மோட்டார் போக்குவரத்துக் கிளையின் உதவி ஆணையாளர் திரு. ஆர்.எஸ். வைரசிங்கா, அல்லது செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் உறுதிப்படுத்தவேண்டும். அத்துடன் ரூபா ஏழு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையும் இணைக்கப்படல் வேண்டும்.

## உழவர் விழா ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தினர் மாவத்தை மைதானத்தில் நடத்தவிருந்த உழவர் விழா வெள்ளம் காரணமாக பின்போடப்பட்டுள்ளது.

## இராஜ கோபுரம்

[வண்ணார்பண்ணை]

எட்டு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள புங்குடுதீவு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் இம் மாதம் 22ம் திகதி புதன் கிழமை நடைபெறவிருக்கிறது

இந்த மகாகும்பாபிஷேக ஆரம்ப நிகழ்ச்சிகள் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அநுஞ்ஞை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகிறது. பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் தலைமையில் எட்டு பிரதிஷ்டா குருமார்கள் இக் கும்பாபிஷேகத்தை நடத்தவுள்ளனர்.

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் சமயச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் வித்துவான் பொன். கனகசபை, திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## இஸ்ரேலுடன் ஸ்பெயின் இராஜதந்திர உறவு!

மட்றிட், ஜன-17

ஸ்பெயின் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை ஆரம்பித்துள்ளது.

மேற்கு ஐரோப்பாவில் இந்த சர்ச்சைக்குரிய உறவை ஏற்படுத்திக்கொண்ட இறுதியான நாடு ஸ்பெயின் என்று தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேலிய அரசியல் நடவடிக்கைகளைக் கண்டித்து சில வருடங்களுக்கு முன்னர் அந் நாட்டுடன் ஸ்பெயின் தனது உறவுகளை முறித்துக்கொண்டது

புதிதாக மீண்டும் உறவுகளை ஆரம்பிக்கவிருப்பது குறித்து அரபுநாடுகளுக்கு ஸ்பெயின் விரிவான விளக்கமொன்றை வழங்கியுள்ளது

இஸ்ரேலுடன் தொடர்புகளை ஏற்படுத்தினுலும் அரபுநாடுகளின் நலன்களோ அல்லது பாலஸ்தீன விடுதலை இயக்கம மீதான ஆதரவோ தடைப்பட்டுவிடாது என்று ஸ்பெயின் கூறியுள்ளது. [கி]

## மணிவாக்கு

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை
—குறள்

[உணவைப் பகுத்துக்கொடுத்தல், உயிர்களுக்குத் துன்பம் வராது காத்தல், சான்றோர் கூறிய அறங்களில் தலையாய அறமாகும்.]

## நமது நோக்கு

# நாடற்றோருக்கு நாடு வீடற்றோருக்கு வீடு

## நாடுள்ளோருக்கு — காடா, கடலா?

பிரபல ஆங்கில நூலாசிரியர் கிப்பிளிங் (Kipling) மறைந்த ஐம்பதாவது ஆண்டு விழாவை கொழும்பு பிரிட்டிஷ் கவுன்சில் இன்று மிகக் குதூகலமாகக் கொண்டாடுகிறது.

1907ல் நோபல் பரிசு பெற்ற முதலாவது ஆங்கிலேயர் இவர்.

இந்தியாவில் பிறந்து, பின் இந்தியாவில் பத்திரிகைத் தொழில் பார்த்து, பிரபல நூலாசிரியராக உயர்ந்த காலத்தில் இந்தியாவே தன் சொந்த நாடு என்ற உணர்வில் பல நாவல்கள், பாட்டுக்கள் எழுதியுள்ளார்.

எமக்கு இன்றைய கொண்டாட்டம் நினைவிற்குக் கொண்டுவருவது அவருடைய பேர்போன "East is East; West is West And never the twain shall meet" என்று தொடங்கும் பாட்டு.

இந்தியாவைத் தன் சொந்த நாடென்று சொண்டபோதும் கிப்பிளிங் மக்கோலே பிரபு என்ற இன்னொரு புகழ்பெற்ற ஆங்கில வரலாற்றாசிரியரைப் போல் ஒரு சாம்ராச்சிய வாதியாக இருக்கலாம். அது எவ்வாறென்பது இன்று ஆராய்ச்சிக்குரிய விடயமல்ல; ஆனால் உலகின் கிழக்கும் மேற்கும் ஒரு போதும் இணையாதென்ற பாட்டுப் பொய்த்துவிட்டது போல் தெரிகிறது.

மத்திய கிழக்கென்று ஒன்று உதயமாகி உலகனைத்தையும் ஆட்டிவைக்குமென்பதை இந்தப் பேரறிஞர் உணர்ந்திருக்கவில்லை.

இருப்பினும் கிழக்கும் மேற்கும் இணைந்துவிடாது என்பதில் உண்மையுண்டு என்பது ஆழமாகச் சிந்திக்கத் தெரிந்தவருக்குப் புலப்படும்.

தூரகிழக்கில் ஜப்பான் இருக்கிறது. அது தூர மேற்கில் உள்ள அமெரிக்காவின் பொருளாதார தொழில் நுட்ப வளர்ச்சிக்குப் போட்டியாக, உண்மையில் அமெரிக்காவை முறியடித்த நிலையில் இருக்கிறது.

இரண்டும் இரு துருவங்கள்; இணையுமா? மூன்றாவது உலக யுத்தம் ஏற்பட்டால், கடந்த யுத்தத்தைப் போல் நடந்துகொள்ளும் என்பதற்கு ஐயமுண்டா?

எங்கள் நாடு அமெரிக்காவுடன் ஒட்டி இழுபடுகின்றபோதும், ஜப்பானிடமிருந்து பேருதவி பெற்று வருகின்றபோதும் ஏப்ரல் 5ம் திகதி 1942இல், உயிர்த்த ஞாயிறன்று கொழும்பில் கண்ட குண்டுமாரியை ஜப்பான் மீண்டும் நடத்தமாட்டாதா?

நாமறியோம், ஆனால் புலவர் கிப்பிளிங் பாடிய பேருண்மை எங்கள் நாட்டுக்கும் பொருந்தும். கிழக்கும் மேற்கும் ஒன்றாக இணையா? அதனைப் பற்றி இன்றைய அரசும் விசனமடையவில்லை.

இன்றைய கேள்விஎன்ன? வடக்கும் கிழக்கும் இணையுமா? இணையுமென்று இயற்கையாகக் கருதப்பட்டாலும் இணையவிடமாட்டோம் என்கிறது அரசு.

அரசியல் தீர்வு, ராணுவத்தீர்வு, அமைச்சர் லலித்தின் ராணுவ- அரசியல் தீர்வு அனைத்தும் இவ்விரு பகுதிகளைப் பிரித்துவைப்பதில் நம்பிக்கை கொண்டுள்ளன.

தெய்வங்களால் இணைக்கப்பட்டவையை, மனிதன் பிரித்துவைப்பது புத்த தர்மத்துக்கே மாறுபட்ட செயல்; ஆனால் இன்று நடைபெறும் போர் கிழக்கில் உக்கிரம்பெற்று, வாகை சூடி, வடக்கில் பாடல் பெற்ற தலங்கள்கொண்ட கோணமாமலையையும், மன்னாரையும் முடித்துக் கொண்டு நெப்போலியன் மாஸ்கோவிற்கு சென்றமாதிரி யாழ்ப்பாணம் வந்திருக்கிறது.

ஹிட்லர் மாஸ்கோவிற்குச் செல்லும் பாக்கியம் பெறவில்லை. இவ்விரு சரித்திர புருஷர்கள் ஈற்றில் வெற்றியடையவில்லை.

இன்று யாழ்ப்பாணத்தில் வாழும், குறிப்பாக யாழ். நகரில் வாழவேண்டிய தலைவிதியுடையவர்கள் அன்று எழுதினவன் அழித்து எழுதுவானா என்ற சந்தேகத்தால் பீடித்திருக்கின்றனர்.

யாழ். கோட்டைக்கு 1000 மீற்றர் அப்பால் இடந்தேடி அலைந்தால் இன்னொரு ராணுவ முகாமின் 1000 மீற்றர், எல்லைக்குள் அகப்படும் நிர்ப்பந்தம் உண்டு. கோட்டைவாழ் முனியப்பரே இதற்கு விடை அளிக்கவேண்டும்.

இந்தநிலையில் பிறப்பிக்கப்பட்ட ராணுவ உத்தரவு என்ன கருத்துக்குள்ளாகிறது?

இன்றைய பத்திரிகைகள் விண்கூவும் விடயங்கள். நாடற்றோருக்கு நாடு கிடைத்தது. ஜனாதிபதிக்கும் அமைச்சர் தொண்டமானுக்கும் ஜே!

வீடற்றோருக்கு வீடுகள் கட்டுப்படுகின்றன. பிரதமர் பிரேமாவுக்கு ஜே!

நாடுள்ள தமிழர்களின் காணிவழக்கு என்னாச்சு! காடா? கடலா?

காணிவழக்கில் யாழ்ப்பாணத்தாரை வெல்லுதல் முயற்கொம்பு. காணிவிற்றும் வழக்காடுவார்-உயிரை விற்கப்படாதென்பதே எமது கவலை.

வழக்கு வழக்காயிருக்க ராணுவ அதிகாரிகள் இதற்குத் தீர்ப்பு வழங்குவது ராணுவ ஆட்சியிலேயே நிகழாத சாதனை.

அவசரப்படேல் என்ற எச்சரிக்கையை யாருக்கு வழங்குவது? யார் வழங்குவது? ஜனாதிபதியா? அல்லது பாதுகாப்பு அமைச்சரா?

# பருத்தித்துறையில் தொடர்ந்து பதற்றநிலை

[புலோலி]

பருத்தித்துறையில் தொடர்ந்து நிலவும் பதற்ற நிலையை அடுத்து இதுவரை நால்வர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிச் சிகிச்சை பெற்றுவருகின்றனர். கடந்த சனிக்கிழமையிலிருந்து பருத்தித்துறைப் பகுதியில் பதற்றம் இருந்து வருகின்றது.

பருத்தித்துறை நகரப்பகுதியிலும் இராணுவமுகாமையடுத்துள்ள பகுதியிலும் தொடர்ந்தும் விட்டுவிட்டும் குண்டுவெடிச் சத்தங்களும், துப்பாக்கி சூட்டுச்சத்தங்களும் கேட்டுக்கொண்டிருககின்றன. அடிக்கடி ஹெலிகொப்டர் வந்துசெல்வதையும் காணக் கூடியதாக இருக்கிறது. பருத்தித்துறை நகரக்கடைகள் மூடப்பட்டுள்ளன. பருத்தித்துறை இலங்கைவங்கி, தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கிக் கிளைகளும் மூடப்பட்டே இருக்கின்றன.

பருத்துத்துறை மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம், பருத்தித்துறை நகரசபை அலுவலகம் ஆகியவற்றின் ஊழியர்கள் அலுவலகங்களுக்குச் செல்ல பாதுகாப்பில்லை எனக் கூறி அலுவலகங்களுக்குச் செல்ல தயங்கிவருவதால் இவ் அலுவலகங்களின் சகல நடவடிக்கைகளும் முற்றாக ஸ்தம்பித்துள்ளது. பருத்தித்துறைப் பகுதிப் பாடசாலைகளுக்கு மாணவ, மாணவிகள் மிகக் குறைந்தளவே சமூகமளித்து வருகின்றனர்.

பருத்தித்துறையில் பொது சந்தைகள் கூடுவதில்லை. பருத்தித்துறை சிவன் கோவிலடியில் மரக்கறிச்சந்தையும், திக்கமுனை மைதானத்தில் மீன்சந்தையும் தற்காலிகமாக இயங்கிவருகின்றன. பருத்தித்துறை மினிவான் சேவைகள் சிவன் கோவிலடியிலிருந்தே ஆரம்பமாகின்றன பருத்தித்துறைநகரச்சுற்றாடலில்வசித்துவந்தமக்கள்அச்சத்தின்காரணமாகஇரவோடிரவாக அயற்கிராமங்களுக்குப் பாதுகாப்புத்தேடி இடம்பெயர்ந்துள்ளனர்.

இதனிடையே பருத்தித்துறையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான வயோதிபரும், இளைஞனும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, வயோதிபர் யாழ். வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார். வியாழக்கிழமை இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான இளைஞனும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு யாழ் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.

# தபால் விநியோகம் ஸ்தம்பிதம்!

(வண்ணார்பண்ணை]

யாழ். பிரதம தபாலகம் நேற்றுமுதல் செயலிழந்ததால் தபால் விநியோகம் நகரின் சகல பகுதிகளுக்கும் நேற்று நடைபெறவில்லை.

பிரதம தபால் நிலையத்தைச் சுற்றிய நகர்ப்புறத்தில் இடம் பெற்றுவரும் தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து தபால் ஊழியர்கள் தமது கடமைகளுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் யாழ். பிரதம தபாலகம் நேற்று முதல் இயங்காது தடைப்பட்டது.

# "ஈழத் தமிழரின் பிரச்னைக்கு இலங்கை அரசே காரணம்"

## கர்நாடக முதலமைச்சருக்கு ஈழவேந்தன் மகஜர்

[சென்னை]

"ஈழத் தமிழர்கள் ஒருபோதும் பிரிவினை கோரவில்லை. ஆனால் இனப்படுகொலைகளில் இருந்து தப்பிக் கொள்வதற்காக, இந்தக் கோரிக்கையை எழுப்பும்நிலைக்குஇலங்கை அரசுதான் அவர்களை ஆளாக்கியது." என்று தமிழீழ விடுதலை அணியின் தலைவர் திரு. எம். கே. ஈழவேந்தன் கர்நாடக முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டேயிடம் நேற்று முன்தினம் கையளித்த மகஜரொன்றில் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழரின் இன்னல்களை எடுத்து உரைப்பதற்காகவும், தமிழர்களுக்கு ஆதரவு திரட்டுவதற்காகவும் திரு. ஈழவேந்தன் திரு. ராமகிருஷ்ண ஹெக்டேயை பெங்களூரில் சந்தித்த பொழுதே இந்த மகஜரை அவர் கையளித்தார்.

ஈழத் தமிழர் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்காக இது வரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றிய விபரங்களையும்திருஈழவேந்தன் எடுத்துரைத்துள்ளார்.

தமிழ்நாட்டில் 125 முகாம்களில் ஒருலட்சத்து முப்பத்தையாயிரம் தமிழ் அகதிகள் வாழ்ந்து வரும் நிலையில் இந்தப் பிரச்னை மிகவும் தீவிரமடைந்து விட்டதாகவும் திரு. ஈழவேந்தன் இச் சந்திப்பின் போது எடுத்துக் கூறினர்.

[து]

## மக்கள் கருத்து

### செய்தி பற்றி விளக்கம்

'ஈழநாடு' 16-ம் திகதி இதழில் நியமனம் எனும் தலைப்பில் வெளியாகியுள்ள செய்தி என்னை அதிர்ச்சியடையச் செய்து விட்டது. சங்கானைப் பட்டின சபைக்கு என்னை இதுவரை நியமிக்கவில்லை, பாராட்டுக் கூட்டமும் இடம் பெறவில்லை என்பதை அறியத்தருகின்றேன்.

என். குமாரசாமி,
[அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்]
யா. அபி. உப அலுவலகம்
பண்டத்தரிப்புக் கிராமம்.

# பத்து லட்சம் வீடமைப்புத் திட்டம்:

# முல்லைத்தீவுக்கு ரூ.10,36,000 வவனியாவுக்கு ரூ. 8,56,000

[கரவெட்டி]

பத்து லட்சம் வீட்டுத் திட்டத்தின் கீழ் இவ்வருடம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பத்து லட்சத்து முப்பத்தாராயிரம் ரூபாவும், வவனியா மாவட்டத்திற்கு எட்டு லட்சத்து ஐம்பத்தாறுயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பொதுமுகாமையாளர் திரு. ச சாந்தலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

இந்நிதி ஒதுக்கீட்டையடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தில் 182 குடும்பங்களும்: வவனியா மாவட்டத்தில் 168 குடும்பங்களும் புதிய வீடுகட்ட, வீடு திருத்த, மலகூடம் அமைக்க வென நிதி வழங்கப்படும்.

இதேவேளை வவனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் பத்து லட்சம் வீட்டுத்திட்ட கடன்கள் முன்னர் போல கிராமோதைய சபைகள் ஊடாகவே வழங்கப்பட இருக்கின்றன. இம்மாவட்டங்களில் ஐக்கிய நாணய சங்கங்கள் இன்மையாலேயே இத்திட்டம் வழமைபோல நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது.

### யாழ்.நகரில் நாளை

## உலக சமயத்தின் வருடாந்த அனுட்டானம்

(யாழ்ப்பாணம்)

உலக சமயதின வருடாந்த அனுட்டானம் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், பேராசிரியர் கா. கைலாசநாத குருக்கள், யாழ். ஆயர் கலாநிதி பி. தியோகுப்பிள்ளை, யாழ். பல்கலைக்கழகத் அரபிக் விரிவுரையாளர் மௌலவி எம். ஐ. அப்துல்றஸாக், பஹாய் இயக்கத் துணைவாரி உறுப்பினர் திரு. க. செ. சுவர்ணராஜ ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள். (க)

# "குடியேற்றத்திட்டங்களை வெற்றிகரமாக தடுத்துள்ளோம்"

## 'ஈரோஸ்' விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது விமானத்தாக்குதலை அண்மையில் ஆரம்பித்திருப்பதிலிருந்து ஈழப்போராளிகளாகிய எமது பாதுகாப்பில் தமிழ் ஈழநிலங்கள் இருக்கின்றன. என்பதனையே இச்செயல் காட்டுகின்றது. தமிழ் ஈழ விடுதலைப்போராட்டத்தை முறியடிப்பதில் சிறிலங்கா அரசு காலத்துக்குக்காலம் எடுத்த சகல நடவடிக்கைகளிலும் படுதோல்வியே அடைந்துள்ளது. 1983ல் ஈழக்கோரிக்கையை ஜனநாயக ரீதியில் தடைசெய்ய எடுத்த நடவடிக்கையும், தென்பகுதி இடதுசாரிகளை ஒழிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை ஏற்பட்ட படுதோல்வியே இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளாகப் பரிணமித்தன. எனினும் அவற்றிலும் தோல்வியே கண்டுள்ளது"

இவ்வாறு, ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"ஈழத்தமிழ் மக்களின் இந்திய உறவைத் துண்டிக்கும் நோக்குடன் சர்வகட்சிமாநாடுகள் மூலம் தீர்வுக்கு வருவது போல நடித்து இலங்கைஅரசு காலத்தை இழுத்தது. இலங்கை-இந்திய கடற்பிராந்தியத்தினூல் ஆயுதங்கள் வருகின்றன என்று கூறி அதைச் சாட்டாக வைத்து தமிழ்ப் பிரதேசங்களின் சில இடங்களைத் தடைப்பிரதேசங்களாகவும், கடல் கண்காணிப்பு வலயங்களாகவும்ஆக்கியது. படகுகளை நிர்மூலமாக்கியதன் மூலமும்,வேறுசில நடவடிக்கைகளை போராளிகள் கைக்கொண்டதாலும் இவைகளிலும் அரசு தோல்வியைத் தழுவியது.

"கடந்த ஆண்டு இடைக்காலத்தீர்வு என்ற போர்வையை போர்த்திய இலங்கை அரசு இயக்கங்கள் செயலிழக்கும் தன்மையை உருவாக்க முனைந்தது. இதிலும் பிரயோசனம் காணப்படாததால் போதைவஸ்துக் கடத்தல் பிரசாரத்தில் ஈடுபட்டது. இதே சமயத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கம் தன்னை மேலும் பலப்படுத்துவதில் கவனம் செலுத்தியது. ஆயுதப்படைகளின் எண்ணிக்கையைக் கூட்டியது, ஆயுதங்களை வருவித்து நேியோகித்தது. குடியேற்றங்களை நிறுவியது. பாரம்பரிய நிலங்களிலிருந்து தமிழர்களைக் கலைத்துவிட்டு அங்கு ஆயுதங்களுடன் குண்டர்களைக் குடியேற்றியது.

மட்டக்களப்பு - கிழக்கு மாகாண மக்களைப் பிரித்து வைக்கும் நோக்குடன் இனங்களுக்கிடையே பிளவுகளை ஏற்படுத்தியது. 'புனித யுத்தம்' என்ற அமைப்பு மூலம் இதனைச்சாதிக்க முனைந்தது. எனினும் இவைகளை முறியடிக்கும் வகையில் மிகவும் தீவிரமாகச் செயல்பட்டு மக்களுக்கு உண்மைகளை உணர்த்தி அவர்களைச் சிந்திக்கக் கூடியவர்களாக ஆக்கிவிட்டதன் மூலம் இவைகளை நாம் முறியடித்தோம்.

"அரசின் மேற்சொன்ன நடவடிக்கைகளும் தோல்வியிலேயே முடிந்தன.

சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட ஊர்காவல் படையின் தான்தோன்றித்தனமான செயல்களால் அரசு பெரும் தோல்வியைத் தேடிக்கொண்டது. ஆயினும் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களைக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள ஊர்காவல் படைகள் அரசுக்குச் சார்பானவர்களைக்கொண்டு உருவாக்கப்பட்டிருப்பது உண்மையே. இப்படையின் நடவடிக்கைகள் தமிழர்களுக்கு விரோதமானவையாக இருந்தபோதிலும் முஸ்லிம் மக்கள் நலனுக்கும் எதிராகச் செயல்படுவதனை அண்மைக்காலச் சம்பவங்கள் சில காட்டுகின்றன. எவ்வாறாயினும் முஸ்லிம் சகோதரர்களின் நலனுக்கு எதிராக யார் செயல்பட்டாலும் அவர்களைக் கட்டுப்படுத்த நாம் உறுதி பூண்டுள்ளோம்.

'இராணுவம், ஊர்காவல் படை எதுவாயினும் எமது போராட்டத்தின் மூலம் நிர்மூலமாக்குவோம். அரசு வடக்கு மாகாணத்தில் மட்டும் போராளிகளுக்குப் பலமுண்டு என்று எண்ணிவந்தது கிழக்கு மாகாணத்திலும், கொழும்பு மற்றும் சிங்கள கிராமங்கள் பலவற்றிலும் எம்மால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் அரசு தனது எண்ணத்தை மாற்றவேண்டியதாயிற்று 'அரசின் புதிய குடியேற்றத்திட்டங்கள் தமிழ்மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களில் நடைபெற்றதால் அங்கு குடியேறிய சிங்கள மக்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் அவர்களைக்காப்பாற்றவும் பாதுகாப்பு வழங்கவும் வந்திருந்த ஆயுதப்படைகள் மீது நாம் தீவிர நடவடிக்கைகளை எடுத்தோம்.

'வடக்கிலும், கிழக்கிலும், மற்றும் சிங்களக்குடியேற்றங்களிலும் எம்மால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிர்கொள்ளமுடியாத அரசு கிழக்குப்பகுதி மக்களைக் கண்டபடி சுட்டுத்தள்ளுகிறது. விவசாயிகள் வயல் வேலைக்கு கூட்டமாகப்போய் வேலைசெய்ய முடியாதநிலை அங்கு நிலவுகிறது. எனவே கொடுவாமடு, கோமாரி, புலிபாஞ்சகல், கல்லரி, ஒந்தாச்சிமடம் போன்ற பகுதிகளில் இராணுவ கெடுபிடிகளுக்கு எதிராகச் செயல்பட்டோம். வாஞுறுப்பகுதி விவசாயிகளைச் சுட்டதால் வாஞுறு பொலிஸ் இராணுவ கூட்டுமுகாமைத் தாக்கினும். புனைதம்பலகாமம் அல்லை, பாலம் போட்ட ஆறு இப்பகுதிகளில் எம் அதிரடித்தாக்குதல்கள் பெருவெற்றி பெற்றன. அரசினூல் ஆயுதம் வழங்கி குடியேற்றப்பட்ட சிங்கள மக்களே தாம் அப்பகுதிகளில் குடியிருக்க மாட்டோம் எனச் சென்றுவிட்டனர். இது எமக்கு அரசின் குடியேற்றத்திட்டங்களை நிர்மூலமாக்குவதில் கிடைத்த வெற்றியாகும் கிழக்கில் வாழும் தமிழ் மக்களையும் ஆயுதபாணிகளாகக் குடியேற்றப்படுபவர்களையும் காப்பதும், தடுப்பதும் எமது முதல் கடமையாகும்.

'1983 முதல் திருகோணமலையிலிருந்து மக்களை விரட்டும் நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டுச் செய்துவருகிறது. திருகோணமலையிலிருந்து மக்கள் வெளியேறுவதை அரசு விரும்புகிறது. காரணம் திருகோணமலையை சிங்களவர்கள் வாழும் பிரதேசமாக்குவதே அரசின் குறிக்கோளாகும். திருகோணமலையிலிருந்து அகதிகளாக யாழ்ப்பாணம் வந்துள்ள மக்கள் அவ்வப்பகுதிகளுக்குச் சென்று மீண்டும் வாழவேண்டும் போராட்டததில் ஒன்று ட்டுத் தம்மைத்தாம் காப்பாற்ற வழிதேட வேண்டும். இதற்கு எமது அமைப்பு வேண்டிய உதவிகளைச் செய்யும் நாமும் பாதுகாப்புகளை வழங்குவோம்.

"தரப்படுத்தல் பிரச்னையில் ஆரம்பமான எமது ஈழப் போராட்டம் உண்மையில் நாடற்றவர்களின் பிரச்னையிலேயே தங்கியுள்ளது. தமிழர் பிரச்னையும் இதுவேயாகும். நாடற்றவர்களாகஉள்ள மலையக மக்களை முதன்மைப்படுத்துவது இன்றைய போராட்டத்தின் முக்கிய அம்சமாகவும், அவசியமாகவும் உள்ளது. ஈழப்போராட்டத்தின் முன்னணிப்படை மலையக மக்கள் என்பதே எமது அமைப்பின் கருத்தாகும். மலையகமக்கள் விடுதலையை விரும்புகிறூர்கள் போராட்டத்தில் முன்னணியில் நிற்கத் தயாராகி வருகிறூர்கள்.

"இன்று நாட்டிலே தமிழ் மக்களில் பலருக்கு தமிழ்ஈழ விடுதலை அமைப்புக்களில் மனஸ்தாபங்கள், வெறுப்புக்கள் ஏற்பட்டிருப்பது உண்மைதான். சில பொறுப்புணர்லாதவர்களால்தான் தமிழ் மக்கள் இயக்கங்கள்மேல்

(8-ம் பக்கம் பார்க்க)


## கடைசிநேர வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

இல. 1353 பொம்மை வெளி வடக்கு (ஆனைக்கோட்டை கிட்ட) குழைத்து ஓடையில் உள்ள 17 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: மு. இராசு, அராலி கிழக்கு. அம்மன் கோவிலடி. C 253

A/L., O/L., ரசாயனம்,விஞ்ஞானம், உயிரியல், தாவர இயல் முதலிய பாடப்புத்தகங்களும், I. C, M. A. புத்தகங்களும் உடன் விற்பனைக்கு உண்டு. 774. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பணம். C 260

## தேவை

மானிப்பாயில் ஒரு குடும்பத்துடன் இருந்து 1½ வயது குழந்தையுடன் பொழுதைக்கழிப்பதற்கு 10—12 வயதுடைய அமைதியும் நேர்மையுமுள்ள பெண்பிள்ளை தேவை. விளம்பர இல. C 256 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். C 256

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் 14வருட அனுபவமுள்ள களஞ்சியப்பொறுப்பாளர், மேற்பார்வையாளர், காசாளர், தொழில் தெரிந்த ரைப்பிங், சாரதிலைசென்ஸ் உடைய 40 வயதுடைய மானிப்பாயை சேர்ந்த குடும்பஸ்தர்க்கு யாழ். மாவட்டத்தில் வேலை தேவை. தொடர்பு: விளம்பர இல. C 255, C/o, ஈழநாடு யாழ்ப்பாணம். C 255

**எம்பயர்**
7 அடி திரையில்
10-30, 2-30, 6-30, 9-15
சிவாஜி (மூன்று வேடம்)
ஸ்ரீபிரியா நடித்த
**திரிசூலம்**
A 100

**லிடோ சினிமா**
10-30, 2-30, 6-30
விஜயகுமார்—ஸ்ரீவித்யா
தங்கவேலு நடித்த
**ஆசை அறுபது நாள்**

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
M. G. R.—லதா
நடித்த
**நீதிக்கு தலைவணங்கு**
[புதிய பிரதி]

## விற்பனைக்கு

எமது பண்ணையில் உள்ள நல்லின பசுக்கள்(3) பசுக்கன்றுகள் (7) நாம்பன்கன்று (') விற்பனைக்குண்டு. மேலதிக விபரங்களுக்கு: 25-1-86ம்திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். A 95

**கூட்டுறவு வைத்தியசாலை யாழ்ப்பாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

## திறப்புவிழா ஒத்திவைப்பு

இம்மாதம் 19ந் திகதி மேற்படி வைத்தியசாலை திறப்பதாக ஏற்கனவே விளம்பரப் படுத்தியிருந்தோம். நாட்டின் தற்போதைய நிலைமை சீரில்லாததால் மேற்படி திறப்பு விழா பின்போடப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

**பொதுமுகாமையாளர்**
C 96

## வெற்று சாக்கு ஏலவிற்பனை

வவனியா தெற்கு தமிழ்ப் பிரிவு பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தில் 28-1-86ந் திகதி காலை 10 மணிக்கு 4000 வெற்று சாக்குகள் ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் பங்கு பற்றுபவர்கள் மீளாய்வு அளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 200/- செலுத்தி ஏலத்தில் பங்கு பற்றலாம்.

**பொதுமுகாமையாளர்**
வவனியா தெற்கு தமிழ்பிரிவு
பல நோக்குச் சங்கம்
வவனியா. A 98

நியூ விக்ரேஸ்
**புதிய**
## வீடியோபட வெளியீடுகள்

[1] **சாதனை**
★ சிவாஜி — பிரபு

[2] **மிஸ்டர் பாரத்**
★ ரஜனி — அம்பிகா

[3] **பிறந்தேன் வளர்ந்தேன்**
★ கவுண்டமணி — ஜீவிதா

**நியூ விக்ரேஸ்** எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
யாழ்ப்பாணம். தொலைபேசி: 23532
A-101

## தோலகட்டி தயாரிப்புகளின் மாற்றப்பட்ட புதிய விலைவிபரங்கள்

ஜனவரி 10ம் திகதி முதல்
அமுலுக்கு வந்தவை

| | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|
| நெல்லிரசம் | 20-50 | 23-50 |
| முந்திரிகை ரசம் | 24-50 | 27-50 |
| மாதுளம் ரசம் | 35-00 | 40-00 |
| நன்னாரி ரசம் | 28-00 | 32-00 |
| மருத்துவ வைன் | 60-00 | 72-50 |
| மேசை வைன் | 45-00 | 52-50 |
| தேசிக்காய் ஊறுகாய் | 15-00 | 18-0 |
| மாங்காய் ஊறுகாய் | 14-00 | 17-00 |
| அச்சாறு | 12-00 | 15-00 |

மேற்குறிப்பிட்ட விலை விபரங்களை
வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள், வியாபாரிகள்
தயவுசெய்து கவனிக்கவும்.

ஆதரவிற்கு நன்றி!

ஏகப்பிரதிநிதிகளும் விநியோகஸ்தர்களும்:

ஜோ. எகட்டன்
செனித் மார்க்கட்டிங்,
யாழ். நகர்.

தோலகட்டி
தயாரிப்பாளர்கள்,
செபமாலை தாசர் சபை,
வயாவிளான்.

[A-99]

## 31ம் நாள் நினைவஞ்சலி

திரு. தம்பையா தில்லைநாதன்



தோற்றம்: 20-12-1905
மறைவு: 18-12-1985

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் உயர வைக்க அயராது உழைத்த எங்கள் அன்புத்தெய்வமே! எங்களை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென அணைந்துவிட்ட எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! நீங்கள் மறைந்தும் மறையாது என்றும் அணையாத ஒளியாய் எங்கள் உள்ளத்தில் உறைந்திருப்பீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.
சண்டிருப்பாய். A-97

# "மக்கள் நலன் கருதி, திருடிய சீனியைத் திருப்பித் தருக!"

## அரச அதிபர் கோருகிறார்

(யாழ்ப்பாணம்)

புகையிரத மூலம் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்ட போது இனந்தெரியாதவர்களினால் மல்லாகத்தில் கடத்தப்பட்ட சீனியை யாழ்ப்பாண மக்களின் நன்மை கருதி திருப்பி ஒப்படைக்குமாறு, யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''புகையிரத மூலம் 15ம் திகதி கொழும்பில் இருந்து காங்கேசன்துறை உணவுக் களஞ்சியசாலைக்கும், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்கும் கொண்டுவரப்பட்ட ரூபா ஒன்பது லட்சம் பெறுமதியான 1250 மூடைகள் சீனி மல்லாகத்தில் வைத்து இனம் தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

''மிகுந்த நெருக்கடியான இக் காலகட்டத்தில் பலவிதமான சிரமங்களின் மத்தியில் சீனி மூடைகள் யாழ்ப்பாணத்து மக்களுக்காக உணவாணையாளரிடமிருந்தும், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத் தலைமையகத்திலிருந்தும் பெறப்பட்டு யாழ்ப்பாணத்து மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிப்பதற்காகக் கொண்டு வரப்பட்டது. சீனித் தட்டுப்பாடு ஏற்பட்டால், அதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் யாழ்ப்பாணத்து ஏழை மக்களே. அதன் காரணமாக உடனடித் தேவைகளுக்கு இவை அவசரமாகப் புகையிரத மூலம் கொண்டு வரப்படும் போது இக் கவலை தரும் சம்பவம் நடைபெற்று உள்ளது.

''இப்படியான சம்பவங்களினால் உணவு ஆணையாளரிடமிருந்தும், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திலிருந்தும் யாழ்ப்பாணத்து மக்களுக்கான உணவும் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் மிகுந்த இடர்ப்பாடுகள் ஏற்படும்.

''1985ம் ஆண்டு குருநகர் யாழ் உணவுக்களஞ்சியத்திலிருந்து உணவுப் பொருட்கள் கொள்ளையடிக்கப் பட்டதன் பின்னர் உணவுப் பொருட்களின் வருகை கணிசமான அளவு குறைந்துள்ளது.

''15ம் திகதி நடந்த செயல் உணவுப் பொருட்களின் வருகையில் பெருந்தாக்கத்தைக் கொண்டுவரும்என அஞ்சப்படுகிறேன் மிகவும் தட்டுப்பாடான காலங்களில் கொண்டு வரப்படும் இவ்வுணவுப்பொருட்களை பொது மக்களின்நலன் கருதி கடத்தல் செய்ய வேண்டாமென மிகவும் தயவாகவும், அன்பாகவும், பணிவாகவும் வேண்டுகின்றேன். எனவே இத்தகைய செயலைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும யாழ்ப்பாணத்து மக்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு தயவுசெய்து கடத்தப்பட்ட சீனியை மீள ஒப்படைக்குமாறும் அன்பாகவும், தயவாகவும் வேண்டுகிறேன்.''

## செயற்குழுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண வர்த்தகர்கள் சங்க செயற்குழுக் கூட்டம் இன்று காலை நடைபெறவிருக்கிறது. சங்கத்திற்கு 'இலச்சினை' ஒன்றை வரைந்தனுப்புமாறு சங்கச் செயலாளர் திரு எஸ். நமசிவாயகம் ஓவியர்களிடம் கோரியுள்ளார். [க]

## இடமாற்றம்

[சுண்டுக்குளி]

யாழ். பிறப்பு இறப்புப் பதிவாளர் அலுவலகத்தில்எழுதுவினைஞர்களாக கடமையாற்றிய மூவர் இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர்.

திரு. கே.வி. தங்கராசா கொழும்பு அரசவழங்கல் திணைக்களத்திற்கும். திரு. கே.பாலசுந்தரம் மன்னார் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கும், திருமதி.எஸ் சகாதேவன் பல்தொழில் நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணத்திற்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர். இவர்களின் இடத்திற்கு ஆட்பதிவுத் திணைக்களம் கொழும்பில் கடமையாற்றிய திரு எஸ் சவுந்தரநாயகமும், கொழும்பு அரச வழங்கல் திணைக்களத்தில் பணிபுரிந்த திரு. கே.ஸ்கந்தராசாவும் இடமாற்றலாகி வந்துள்ளனர்.

## நாளை உதைபந்தாட்ட பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம்]

''யாழ். உதைபந்தாட்ட லீக்'' அண்மையில் நடத்தி முடித்த 7 வீரர்கள் அங்கம் வகித்த உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் பரிசளிப்புவிழா நாளை நடைபெறவிருக்கிறது.

மேற்படி நொக்கவுட் போட்டியில் 'ஏ' பிரிவில் 'பொற்பதி' ஐக்கிய விளையாட்டுக் கழகமும் 'பி' பிரிவில் சாம்பியனான சாம்பியனான நாவாந்துறை சென். மேரிஸ் 'பி' கழகமும் 'ஏ' பிரிவில் 2-வது இடத்தைப் பெற்ற 'கிறீன்பீல்ட்' கழகமும், 'பி' பிரிவில் 2-வது இடத்தைப்பெற்ற சென். மேரிஸ் 'ஏ' கழகமும் இப்பரிசளிப்பு விழாவின்போது, கண்காட்சிப் போட்டியில் கலந்து கொள்கின்றன,

இப்பரிசளிப்பு விழாவுக்கு யாழ். லீக்கின் தலைவர் டாக்டர் ஜே பி. வி. பிலிப் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார். [வி]

## இன்று பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க மஞ்சரி கிறிஸ்மஸ் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் யாழ். ஆஸ்பத்திரி வீதி எதிர்ப்பக்கத்தில் நடைபெறவிருக்கிறது.

அதி. வண. லூயிஸ் பொன்னையா அடிகளார் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ். ஆயர் அதி. வந். டாக்டர் வ. தியாகுப்பிள்ளை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். (க)

## பரிசளிப்பு வைபவம்

[கரவெட்டி]

வதிரி டயமன்ட் விளையாட்டுக்கழக ஆதரவில் வதிரி தமிழ் மன்ற இளைஞர் கழகம் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு வைபவமும் நாளை நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்திற்கு பிரதம விருந்தினராக பொறியியலாளர் திரு. க. பாலச்சந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு கே. கார்த்திக் நிஸ்கோ மாவட்ட முகாமையாளர் செல்வி சே. மகேஸ்வரி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

## தேசிய அடையாள அட்டை

(சுண்டுக்குளி)

தவறவிடப்பட்ட 30 தேசிய அடையாளஅட்டைகள்பொது மக்களினால் கண்டெடுக்கப்பட்டு யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் இவற்றை தமது அலுவலகத்தில் உடன் வந்து தகுந்த அத்தாட்சி காட்டி பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். ஆட்பதிவுத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திரு. ரி. கார்த்திகேசு தெரிவித்தார்.

இன்னும் இரு மாதங்களில் இவற்றைப் பெற்றுக் கொள்ளத் தவறின் கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## இன்றைய பலன்

மாதம்- தை
திகதி- 5 (1986-1-18)
கிழமை- சனி
திதி- அட்டமி
மு.இ.வரை
நக்ஷத்திரம். அச்சுவினி
பி.இ. வரை

மேடம்: உடல்நலத்தில் அபிவிருத்தி தென்படும். குடும்பத்தில் சுபகருமங்களும் இடம்பெறும். பயன்தரக் கூடிய உடன்படிக்கையொன்று இன்று கைச்சாத்திடப்படலாம்.

இடபம்: பணம் பறிபோவதற்குஇடமேற்படலாம். முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும். இன்று திடீர்வரவிற்கும் இடமுண்டு.

மிதுனம்: எதிலும் தயக்க நிலைதென்படும். நண்பர்களுப் முறைகூறுவார்கள், பொருளாதாரத்துறையில் மந்தநிலை தென்படும். வாய்வுரோகங்களுக்கு இடமளியாது உணவு விடயத்தில் கவனம் செலுத்தவும்.

கடகம், மனம் நிறைந்த சம்பவங்கள் இடம் பெறும். பெரியவர்களின் ஆசி தாராளமாகக் கிடைக்கும். கைவிடப்பட்ட பணவரவு மீண்டும் கிடைக்கலாம்.

சிங்கம், இனந்தெரியாத கவலையால் சோர்வடைவீர்கள். வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ளவும் புத்திரவழியால் கவலைகள் தோன்றக்கூடும். பெரியவர் ஒருவரின் அறிவுரை ஆறுதல் தரும்.

கன்னி: திட்டமிட்டபடி வாழ்க்கை நடக்கும். சிரமமானகாரியங்களை இலகுவாகச் செய்துமுடிப்பீர்கள் இன்று அதிகபேச்சைத் தவிர்த்துக் கொள்வதுடன் அவதானமாக நடக்கவும்

துலாம்; கனிவான நினைவுகளில் மூழ்கிப்போவீர்கள் குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும் நீண்டநாள் அபிலாஷை இன்று நிறைவேறும்.

விருச்சிகம்: உறவு முறைகளில் பிளவுகள் தென்படும். மனதில் உற்சாகம் குன்றும். இன்று அபாயகரமான காரியங்களைத் தவிர்க்கவும்.

தனுசு: பாக்கிய விருத்தியுடன் பரம்பொருளின் அருளும் கிடைக்கும். தக்க சமயத்தில் உதவுவதற்கு தந்தை முன்வருவார் பெரிய இடத்துத்தொடர்பொன்று இன்று ஏற்படலாம்.

மகரம்: இதயத்தில் தென்றல்வீசும். பிறந்தகத்தின் தொடர்புகள் வளரும். மூத்தோரின் உதவியுடன் முன்னேற்றத்திற்கிடமேற்படும்.

கும்பம்: முத்தான சந்திப்பொன்று கிடைக்கும். முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும். இன்று பொன்னான தினம்.

மீனம்: பகைமூட்டம் வட்டமிடும். தொழில் துறையில் முட்டுக்கட்டை தோன்றக் கூடும். கடிதமொன்று கவலையைத் தரலாம். செலவீனங்கள் அளவிற்கு மிஞ்சியதாகவே இருக்கும்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

## உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

தைப்பொங்கல் தினத்தையொட்டி வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகத்திற்கும், மாதகல் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்ட மோதலில் முதலாம் பிரிவில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் மாதகல் விளையாட்டுக் கழகத்தை 1-0 என்ற கோல்களால் தோற்கடித்தது.

இரண்டாம் பிரிவிற்கான மோதல் தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறவில்லை. மூன்றும் பிரிவிற்கான மோதலில் இரு குழுக்களும் தலா ஒருகோல்களைப் போட்டு வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. [ச]

## மீனவர் உணவு முத்திரை

[சுண்டுக்குளி]

கடல் கண்காணிப்பு வலயத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான 3 வது கட்ட உணவு முத்திரைகள் கொழும்பில் இருந்து யாழ். உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை இன்னும் சில தினங்களில் யாழ் மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென்றும், சென்ற டிசம்பர் மாதத்திற்குரிய பங்கீட்டுப் பொருட்களையும் இம்மாதம் பாவனையாளர்கள் பெறலாம் எனவும் யாழ் உணவுத் திணைக்கள உத்தியோகத்தர் தெரிவித்தார்.

**யாழ். வர்த்தக சங்க**



## சாம்பியன்

(உடுவில்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் செல்வன் ப. முருகானந்தன் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட பிரிவில் 100 மீற்றர் ஓட்டம் 200 மீற்றர் ஓட்டம் குண்டெறிதல் ஆகியபோட்டிகளில் முதலாம் இடத்தைப்பெற்று சிறந்த வீரராக (சாம்பியன்) தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் மானிப்பாய் கல்விவட்டார பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டியில் 1[7] வயது உட்பட்ட பிரிவில் குண்டெறிதல் முதலாம் இடத்தையும், பரிதிவட்டம் வீசுதல் 100 மீற்றர் ஓட்டம் ஆகியவற்றில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்

இவர் மேற்படி கல்லூரியில் சாரணர் பிரிவுத் தலைவராகவும் மூன்றும் பிரிவு உதைபந்தாட்ட வீரராகவும் விளங்குகிறார்.

இவர் உடுவில் கிழக்கைச் சேர்ந்த மஸ்கன் கம்பனிமுகாமி திரு அ.பற்குணராசா தம்பதிகளின் ஏகபுதல்வராவார்.

# "90 வீதமான மாணவர்கள் விவசாயக் குடும்பத்தவர்!"

## விவசாயக்கழக வைபவத்தில் பேச்சு

[உடுவில்]

''யாழ்ப்பாணத்துப் பாடசாலை மாணவர்களில் தொண்ணூறு வீதமான பிள்ளைகள் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பாடசாலைகளில் இவர்கள் விவசாய பாடத்தைக் கற்பதில் தனி ஆர்வம் காட்டுகின்றனர். இதற்குக் காரணம் விவசாய பாடம் ஒரு பரீட்சைப்பாடமாக அமையாது வாழ்க்கைப் பாடமாக அமைந்துள்ளமையே ஆகும். ஆண்பிள்ளைகள் மட்டுமன்றிப் பெண்பிள்ளைகளும் விவசாயத்தை ஒரு பாடமாகக் கற்பதன் மூலம் வீட்டுத்தோட்டச் செய்கையில் கணிசமான பங்கேற்றுக் கொள்ளுகிறார்கள்.''

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் மாணவர் விவசாயக் கழகம் ஒன்றை ஆரம்பித்து வைத்துப்பேசிய பாடசாலை அதிபர் திரு. வை. யோகீஸ்வரன் இவ்வாறு கூறினார்.

வடமாநில விவசாய வட்டாரக் கல்வியதிகாரி செல்வி தி. பெரியதம்பி அவர்களைக் கௌரவ ஆலோசகராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கழகத்தின் துணைப் போஷகராக ஆசிரியர் திரு. கே. செல்வகுமரன் விளங்குகிறார்.

ஆரம்ப விழாவில் ஆசிரியர் திரு. வி. பரிபூரணானந்த சர்மா கழகத்தின் செயற்பாடுகள் நோக்கங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

மேற்படி விவசாயக் கழகத்தின் நடப்பாண்டு நிர்வாகிகளாகப் பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: செல்வன் இ. சீவன், உப தலைவர்: செல்வன் த. மகேந்திரராசா, செயலாளர் செல்வன் ந. சுபாகரன், உப செயலாளர் செல்வன் த. பிரேமகுமார். பொருளாளர்: செல்வி து. ரிஷா, பத்திராதிபர் செல்வன் பா. சத்தியபாலன்.

## களவு

[சுழிபுரம்]

சுழிபுரம் திருவடிநிலை தமிழ் கலவன் பாடசாலை உபகரணங்கள் களவாடபட்டுள்ளன. மேசை, வாங்கு, கதிரைகள் ஆகிய பொருட்களே திருடப்பட்டவையாகும். இக்களவு சம்பந்தமாக பாடசாலை அதிபர் திரு. இ. முருகேசு கல்விப் பகுதியினருக்கு முறைப்பாடு செய்துள்ளார். களவாடப்பட்ட பொருட்களின் பெறுமதி மதிப்பிடப்படவில்லை.

## 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு

[கரவெட்டி]

வவனியா நகரசபைப்பகுதி வீடமைப்புத் திட்டத்துக்கு இந்த ஆண்டு 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பத்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியான நகரப்பிரிவுகளுக்கான இவ் வீடமைப்புத் திட்டத்தின் படி வவனியா நகர எல்லைக்குள் உள்ள 125 குடும்பங்கள் இக் கடன்களைப் பெறவுள்ளன.

## புதிய வட பிராந்திய ஆணையாளர்

(பண்டத்தரிப்பு)

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி இம் மாதம் தொடக்கம் படையின் வட பிராந்திய ஆணையாளராக நியமனம் பெற்றுள்ளார். யாழ். மாவட்டத்தில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் சிறந்த சேவைகளை அண்மைக் காலங்களில் நடைமுறைப் படுத்தி வந்த டாக்டர் இன்னுசித்தம்பிக்கு பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத்தின் ''சேவையாற்றும் சகோதரர்'' என்ற பட்டமும் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதி மன்றத்தில்

தெல்லிப்பழை என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம் ஏரம்பமூர்த்தி என்பவரின் மரணசாதனமற்ற மரணச்சொத்துக்களின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி/256

ஏரம்பமூர்த்தி கைம்பெண் சௌபாக்கியகௌரி அம்மாள் பன்னாலை தெல்லிப்பழை

மனுதார்

எதிராக

ஏரம்பமூர்த்தி இரஞ்சன்
ஏரம்பமூர்த்தி வசந்தன்
ஏரம்பமூர்த்தி அசோகன்
ஏரம்பமூர்த்தி மகள் வாசுகி. எல்லோரும் பன்னாலை தெல்லிப்பழை

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986-ம் ஆண்டு தை மாதம் 22-ந் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் திகதி

1986 ஜனவரி மாதம் 29-ம் திகதி

நீதிமன்ற ஆணைப்படி
ஆழ்வார்
சிவபாதசுந்தரம்.
(ஒப்பம்)
பதிவாளர்.

வரைவு:
ம. சிதம்பரநாதன்
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி.

C 247

# கல்லூரி வாரத்தில் பழைய மாணவர் சேவை

[மானிப்பாய்]

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவர் சங்கம் கல்லூரி வாரத்தினை முன்னிட்டு இங்குள்ள நூல் நிலையத்தைப் புதுப்பித்துள்ளது.

கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தினரின் ஒத்துழைப்புடன் இவர்கள் சிரமதான மூலம் இச் சேவையைச் செய்துள்ளனர்.

நூல்நிலைய உட்புறம் பூச்சுப் பூசி சில புதிய தளபாடங்கள அன்பளிப்புச் செய்தும் நூல்நிலைய வளர்ச்சிக்கு உதவியளித்துள்ளார்கள்.

புதிய தோற்ற மளிக்கும் இந்த நூல்நிலையம் விரைவில் சிறப்பான முறையில் மாணவர்களது பாவனைக்கு மீண்டும் திறந்துவிடப் படவிருக்கிறது. இத் திறப்புவிழாவுக்கான ஏற்பாட்டினை பழைய மாணவர் சங்கத்தினரும் அதிபர் ஆசிரியர், மாணவர்களும் செய்து வருகின்றனர்.

நூல் நிலையப் புதிய தோற்றத்துக்கான செலவாகச் சங்கத்தினர் சுமார் ரூபா இரண்டாயிரம் வரை செலவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

## முத்தமிழ் சனசமூக நிலையம்

[யாழ்ப்டாணம்]

சொட்டடி முத்தமிழ் சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள் தெரிவுக் கூட்டத்திற்குப் போதிய அங்கத்தினர்கள் வருகை தராததினால் நிலைய வளர்ச்சிக்காக 6 பேர் அடங்கிய குழு தெரிவுசெய்யப்பட்டது. விபரம் வருமாறு:

திருவாளர்கள் இ. தவராசா, மு. அருமைராசா, ப. மகேஸ்வரன், ப. ஆனந்தராசா, ஐ. மகேந்திரராசா, க. மதியழகன்

## ஆஸி.யில் வசிக்க அரசு அனுமதி
### 20-ல் விசாரணை

(கொழும்பு)

இலங்கை திரும்பினால் தண்டனைக்குட்படுவோம் என்று அச்சம் தெரிவித்த ஐந்து இலங்கைத் தமிழர்களுக்கு ஆவுஸ்திரேலியா அரசு தொடர்ந்தும் ஆவுஸ்திரேலியாவில் வசிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த அக்டோபர் மாதம் ஆவுஸ்திரேலியா வந்து சேர்ந்த இந்த ஐந்து தமிழர்களுக்கும் ஆவுஸ்திரேலியாவில் தங்குவதற்கு அந்நாட்டரசு வழங்கிய விசாக் காலத்தை விட அதிககாலம் அவர்கள் ஆவுஸ்திரேலியாவில் தங்கினர் என்ற காரணத்தை காட்டி ஆவுஸ்திரேலியா அரசு அந்த ஐவரையும் உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்தது.

அகதிகள் அந்தஸ்தை அல்லது நிரந்தரமாக வசிப்பதற்கு அனுமதி வழங்க மறுத்த ஆவுஸ்திரேலியா அரசின் முடிவை எதிர்த்து அந்த ஐவரும் மீளாய்வுமனு ஒன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தனர்.

இம்மீளாய்வுமனு அடுத்த மாதம் 20-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவிருப்பதால் அதுவரை அவர்கள் அங்கு வசிக்கலாமென நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்தே அவர்கள் ஆவுஸ்திரேலியாவில் வசிப்பதற்கு ஆவுஸ்திரேலிய அரசு அனுமதி வழங்கியுள்ளது. (ச-ய)

## பனைமரம் வீழ்ந்து குழந்தை பலி

[யாழ்ப்பாணம்]

பெரிய தாயாருடன் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த இரண்டு வயதுக் குழந்தைக்கு மேல் பட்ட பனைமரம் விழுந்ததால் குழந்தை பலியானது. பெரியதாயார் காயமடைந்தார்.

அரியாலையைச் சேர்ந்த செல்லத்துரை ஷர்மிலதரன் [2 வயது] மரணவிசாரணையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

யாழ. மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்தினார்.

சம்பவதினம் குழந்தையின் தந்தை வேலைக்குச் சென்றுவிட்டதாகவும், தாயார் குழந்தையை அவரது சகோதரி தங்கலட்சுமியிடம் கொடுத்டவிட்டு வேலைகளை கவனித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நண்பகல் பெரியதாயார் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வரும் வழியில் பனைமரம் அவர்கள் மீது விழுந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. [க[

## முத்திரை தட்டுப்பாடு

[சுண்டுக்குளி]

சுண்டுக்குளி தபாலகத்தில் 75 சதம் பெறுமதியான முத்திரைகள் மட்டுமே பாவனைக்குள்ளன. இதற்கும் கூடிய பெறுமதியுடைய முத்திரைகள் இங்கு இல்லாமையினால், பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரம், கடவுச்சீட்டு, வாகன அனுமதிப் பத்திரங்கள் ஆகியவற்றுக்கு விண்ணப்பிப்போர் பெரும் இன்னலுக்குள்ளாகின்றனர்.

## அரசு நிறுவனங்கள் இடமாற்றம்?

[புலோலி]

பருத்தித்துறை நகரில் உள்ள பல அரசாங்க நிறுவனங்கள் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்படலாமென அறியப் படுகிறது.

பருத்தித்துறையில் தொடர்ந்து நிலவும் பதற்ற நிலையையடுத்தே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம், நகரசபை அலுவலகம், இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி ஆகியனவே இடமாற்றம் செய்யப்படலாமென அறியப் படுகின்றது.

பருத்தித்துறை நகர் நேற்று வெள்ளிக்கிழமையும் வெறிச்சோடிக் கிடந்தது பருத்தித்துறை சிவன் கோவிலடியில் மரக்கறிச்சந்தையும் திக்கமுனையில் மீன் சந்தையும் கூடியிருந்தது. புலோலி கிராமக் கோட்டடியில் யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் புதிய பொது சனச்சந்தையும்இயங்கி வருகின்றது.

## உடைமைகள் சூறையாடப்படுவது
# அனுமதிக்க முடியாது
### ஈ. பி. ஆர். எல். எப். அறிக்கை

[யாழ்ப்பாணம்]

விடுதலை அமைப்புக்களின் பெயர்களை பயன்படுத்தி உடைமைகளைச் சூறையாடுவதையோ, தேசப்படுத்துவதையோ எக்காரணம் கொண்டும் அனுமதிக்கமுடியாது. இத்தகைய நடவடிக்கைகள் விடுதலை அமைபுக்களுக்கும், மக்களுக்கிடையிலான பிணைப்பை இல்லாதொழிக்கும் என்பதால் நாம் கடுமைமான நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத் துண்டுப் பிரசுரத்தில் மேலும்கூறப்பட்டிருப்பதாவது யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைத் தொழிற்சாலை ஒன்று ஆயதங்கள் சகிதம்வந்து கொள்ளையர்களால் சூறையாடப்பட்டுள்ளது. கொள்ளையர்கள் எமது ஸ்தாபனத்தின் பெயரை உபயோகித்தே இக் கொள்ளையில் ஈடுபங்டுள்ளனர் எமது ஸ்தாபனத்தின் பெயரை உபயோகிக்கும் இவ்வாறான கயமைத்னமான செயல்களை நாம் தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாதவர்களாகியுள்ளோம்.

ஏற்கனவே எமது ஸ்தாபனப் பெயரைப் பயன்படுத்தி சில, தனியார் வாகனக் கடத்தல்கள் கொள்ளைகள் போன்றவற்றில் ஈடுபட்டவர்களை நாம் அடையாளம் கண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு இனங்காட்டியுள்ளோம்.

திட்டமிட்ட வகையில் எமது ஸ்தாபனப் பெயரை, மக்கள் விரோத நடவடிக்கைகளுடன் இணைத்துப் பேசுவோர்மீதும் நாம் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது. சம்பந்தப்பட்டவர்களை எமது தோழர்கள் அணுகி உரிய விளக்கம் கொடுத்தபின்னரும் தொடர்ந்து அவர்கள் வதந்திக்ள்பரப்புவது தொடருமானால் நாம் நடவடிக்கை எடுப்பது தவிர்க்கமுடியாததாகும்.

ஆனால் பொறுப்பற்றமுறையில் தவறான வதந்திகளைநம்பி எமது ஸதாபனத்தைப் பற்றிய உண்மைக்கும்புறம்பான விடயங்களைக் கூறித் திரிவது கண்டிக்கப்பட வேண்டியதாகும். எமது ஸ்தாபன தோழர்களை அணுகி எவ்விதமான விளக்கமும் கேட்காமல் வாய்க்கு வந்தபடி திரிபு பட்டசெய்திகளைப் பேசித்திரிவது மிகவும் பொறுப்பற்ற செயலாகும். எமது ஸ்தாபனம் பற்றிய விமர்சனங்களை உங்கள் மத்தியிலுள்ள எமது தோழர்கள் மூலம் முன்வையுங்கள். எம்மோடு இணைந்துநின்று எம்மைத்திருத்துங்கள், பலமாக்குங்கள் என்று எமது மக்களைக் கேட்குக்கொள்ளுகிறோம்.

## தென்புலோலியில் நூல்அறிமுகவிழா

[புலோலி]

தென்புலோலியில்19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மூன்று நூல்களுக்கான அறிமுகவிழா புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெறுகின்றது.

கோகிலா மகேந்திரன், தென்புலோலி இரத்தின வேலோன் ஆகியோரின் 'அறிமுகவிழா' நூல், புலோலியூர் தம்பையாவின் 'அடிமையின் விலங்கு அறுகிறது', 'மூட்டத்திற்கு உள்ளே' ஆகிய நூல்களின் அறிமுக விழாவே பண்டிதர் பரந்தாமனின் தலைமையில் நடைபெறுகின்றது. புலோலி கொத்தணி அதிபர் திரு. வீ. எஸ். ஏகாம்பரநாதன், சபா, ஜெயராஜா, நெல்லை. க. பேரன், தெணியான் உட்பட இன்னும் பலர் ஆய்வுரைகளை வழங்குவார்கள்.

## மே. ஜேர்மன் நிறுவனத்தினால்
# மாவை லயன்ஸ் கழகத்துக்கு மூக்கு கண்ணாடி அன்பளிப்பு

(மாவிட்டபுரம்)

மாவை லயன்ஸ் கழகத்துக்கு மேற்கு ஜெர்மனி நிறுவனம் ஒன்றினால் மூக்குக் கண்ணாடிகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அன்பளிப்பாகக் கிடைத்துள்ள கண்ணாடிகளை மாவை. லயன்ஸ் கழகம் எதிர்வரும் 26-ந் திகதி விசேட கண் பரிசோதனை முகாம் ஒன்றை நடாத்தி வருமானம் குறைந்தவர்களுக்கு வழங்கவுள்ளது.

மாவை லயன்ஸ் தையல் நிலையத்தில் நடாத்தப்படும் இம்முகாமில் விசேட வைத்திய நிபுணர்களால் பரிசோதனை செய்யப்பட்டு இலவசமாக கண்ணாடிகள் வழங்கப்படவிருக்கிறது.

மேற்படி அன்பளிப்புக் கண்ணாடிகள் லயன்ஸ் கழக தலைமைக் காரியாலயத்தின் மூலமாகவே மேற்கு ஜெர்மனியில் இருந்து கிடைத்துள்ளன.

## ரூபவாஹினி

ஜனவரி 18 சனிக்கிழமை
மாலை:
5-00 செய்திகள்,
5-05 - உள்ளூர் உதைபந்தாட்ட நிகழ்ச்சி.
5-30 உலக விளையாட்டு அரங்கு.
6-30 செய்திகள்-தமிழ்.
7-00 'பிளனட் ஒவ் த ஏப்ஸ்'
8-00 செய்திகள் - சிங்களம்
8-25 'யகோரவய' (ரெலி நாடகம்)
9-00 செய்திகள் - ஆங்கிலம்
9-25 நேயர்களின் கேள்விகள்
9-50 'மக்லெயின்ஸ் லோ' ஆங்கில நிகழ்ச்சி.
10-40 ஒளிபரப்பு முடிவு.

## நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

காலி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்ரா ஆலய பரிபாலன சபையின் வருடாந்த கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

உப-தலைவர் திரு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: திரு. கனகலிங்கம், உப தலைவர்கள்: க. மு. நடராசா, சி. சிவசுப்பிரமணியம், காரியதரிசி: சு. சச்சிதானந்தன், உப காரியதரிசி: செ. வரதராசா, தனாதிகாரி: மு. சண்முகராசா, உப தனாதிகாரி: சி. சுந்தரம்பிள்ளை, கோவில் காரியதரிசி: ச. யோகலிங்கம், உப காரியஸ்தர்: சே. இரத்தினராசா.

## கைது

[கிளிநொச்சி]

மாங்குளம் தபால் கந்தோரில் தபால் ஊழியராகக் கடமையாற்றும் மாப்பாணபிள்ளை கதிர்காமநாதன் [வயது 27] என்பவர் கடமை நேரத்தில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பிரஜைகள்குழுவிற்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு விநியோகிக்க வைத்திருந்த பெருந்தொகையான கடிதங்களுடன் இவர் மாங்குளம் மகாவித்தியாலயத்திற்கு முன்பாக வைத்து கடந்த சில தினங்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டார்.

இதுதொடர்பாக கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவினர் இணைப்பதிகாரி கேர்ணல் கொப்பேகடுவாவுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## ● வேதாரணியம் சம்பவம்:
# தமிழ்ப் போராளிகள் மீது களங்சம் ஏற்படுத்தும் சதித்திட்டம்
## எம்.எல்.ஏ. தரும் விளக்கம்

(சென்னை)

''தமிழ்ப்போராளிகள் மீது களங்கம் கற்பிக்க சமூக விரோதிகளால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட கலவரம் வேதாரணியம் ்ம்பவமாகும்'' என்று வேதாரணியம் எம். எல். ஏ. திரு. எஸ். மீனுட்சி சுந்தரம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

''வேதாரணியம், கடத்தல் காரர்களின் கேந்திரத்தளமாகும். இப்போது இங்கு தமிழ் போராளிகளும், இலங்கை அகதிகளும் இவர்களுக்கு இடைஞ்சலாக இருப்பதால் இது திட்டமிடப்பட்டு ஏற்படுத்தப்பட்ட சதியாகும். விசாரணையொன்றுநடைபெறுமானுல் உண்மைநிலை தெளிவுபடும்'' என்று திரு. மீனுட்சி சுந்தரம் தமது அறிக்கையில் மேலும்தெரிவித்துள்ளார். (கெ

## பாதுகாப்பு வலயம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நாவற்குழி இராணுவமுகாமிற்கு முன்பாக உள்ள வீதியால் 'வாகனப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. வ. போ. ச. பஸ்கள் உட்பட சகல மினிபஸ்களும் நேற்று கோப்பாய்ஊடாக சென்றன. நாவற்குழி முகாமிலிருந்து 1000 மீற்றர் பாதுகாப்பு பிரதேசம், ஒரு பக்கத்தில் அரியாலை வரையும், மறுபக்கத்தில் கைதடி வரையும் அமைந்துள்ளது. இதனுல், வாகனங்கள் அப்பாதையால் செல்ல அச்சமடைந்துள்ளன.

யாழ். கோட்டைக்கு சமீபமாகவுள்ள பண்ணை பாதையாலும், வ கனப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. தீவுப் பகுதிக்கு முன்னர்போல், காரைநகர் ஊடாகவே வாகனங்கள் செல்கின்றன.

யாழ், ஆஸ்பத்திரி ஊழியர்கள், தாங்கள் வேலைக்கு வர முடியாதநிலையில் இருப்பதாக வைத்திய அத்தியட்சகரிடம் தெரிவித்துள்ளனர்.

வைத்திய நிபுணர்களும் மற்றும் டாக்டர்களும், நோயாளிகளை தாங்கள் பொறுப்பு ஏற்க முடியாதென்றும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கமுடியாதநிலையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

வார்ட்டிலுள்ள நோயாளிகளும், பலத்த அச்சமடைந்துள்ளனர்.

யழ். பஸ் நிலையத்தில் கடமையாற்றும் வ. பி. போ ச. ஊழியர்களும் அங்கு கடமையாற்ற முடியாத நிலைமையில் இருப்பதாக மேலிடத்திற்கு அச்சம் தெரிவித்துள்ளனர். தனியார் வர்த்தகநிலைய ஊழியர்களும் பெரும்பீதியடைந்துள்ளனர்.

யாழ் குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்களைச் சுற்றி 1000 மீற்றர் பாதுகாப்பு பிரதேசமாக அரசினுல் பிரகடனம் செய்யப்பட்டதற்கு தமிழ் பகுதி பிரஜைகள் குழுவின் இணைப்புக்குழு பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனுவுக்கு நேற்று பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழு அனுப்பியுள்ள கடிதத்தில் எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த 3 தினங்களாக நடந்துள்ள சம்பவங்கள் பற்றியும், இக்கடிதத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

## இணைப்பதிகாரி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் அதிகாரிகள், கல்விப் பணிப்பாளர், ரயில்வேப்பகுதி தொலைதொடர்பு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பாதுகாப்பு வலயப்பிரகடனம் சம்பந்தமாக எதுவித அச்சமும் கொள்ளவேண்டாம் என்றும், சகல ஊழியர்களும் கடமையாற்றலாம் என்றும் முப்படைகளின் இணைப்பதிகாரி இம்மகாநாட்டில் உறுதி அளித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## குப்பிளான்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைச் சேர்ந்தவர். இந்த நால்வருமே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களாவர்.

இராணுவம் சென்ற வீதியில் இரத்தக்கறைகள் காணப்பட்டதாக பின்னர் தெரிவிக்கப்படுகிறது.

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் முருகேசு கந்தையாவின் (58வயது) வீடு குண்டு வீச்சுக்கிலக்காகி முற்ருக எரிக்கப்பட்டிருந்தது. சுமார் 2 லட்சம் ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார். 5 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம், 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் காணுமல் போனதாகவும் முறையிட்டுள்ளார். ரி. வி., டெக், ரேப்றெக்கோடர் உடுபிடவைகள் எல்லாம் அவற்றுள் அடங்கும்.

அதேவீட்டுக்கு அருகாமையிலுள்ள நல்லசேகரப்பிள்ளை பாலசுப்பிரமணியம்[48வயது] என்பவரின் வீடும் எரிக்கப்பட்டும் சேதப்படுத்தப்பட்டுமிருந்தது. ரி. வி. கசட், வானெலி, காணி ஈடு வைத்த 75 ஆயிரம் ரூபா ரொக்கப்பணப், 15 பவுண் நகைகள், கூறைச்சேலைகள் காணுமற் போனதாகவும் அங்கு வந்த அதிகாரிகளிடம் முறையிட்டார்.

சின்னத்தம்பி சிவலிங்கம் என்பவரின் வீடும், கடையும் சேதப்படுத்தப்பட்டிருந்தன. கதிரித்தம்பி செல்வராசா காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை மின்முகாரி என்பவரின் வீட்டில் நின்ற மோட்டார் சைக்கிளுக்கும் தீவைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த இருரேப்றெக்கோடர், சுவர்க்கடிகாரம் காணுமல் போய்விட்டனவாம். பீற்றர் தேவா என்பவரின் வீட்டில் மோட்டார் சைக்கிள், உடுபிடவைகள் எரிக்கப்பட்டிருந்தன.

ஏழாலைவடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி சின்னையா சித்திரம் என்பவரின் வீடும் சேதப்படுத்தப்பட்டதுடன் 36 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் சூறையாடப்பட்டதாகவும், அண்மையில் குடிபுகுந்த நாகராசா சந்திராதேவி என்பவரின் வீட்டில் சுமார் 50ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள ரி வி. டெக், ரேப்றெக்கோடர், உடுபிடவைகள் எவர்சில்வர் பாத்திரங்கள் காணுமல்போய்விட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது. அங்குநின்ற காரும் பதம்பார்க்கப்பட்டிருந்தது. [மா]

## குடியேற்றத்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

வெறுப்பு அடைந்துள்ளனர். ஆயினும் இயக்கங்களை வெறுத்தாலும் எம்மக்கள் இராணுவத்தின் பக்கம் சேரவில்லை என்பதனை நாம் அவதானிப்பதிலிருந்து, இயக்கங்களை தமிழ் மக்கள் கண்டிப்பது அவர்களைத் திருத்தும் நோக்குடன் தான் என்பது புலனுகிறது. இனிவரும் காலத்தில் ஸ்ரீலங்கா அரசு தமிழ் பாரம்பரிய பிரதேசங்களில் குண்டர்களைக் குடியேற்றலாம், திருகோணமலையைச் சிங்கள மாவட்டமாக்கலாம். மூதூர் கிண்ணியா. கந்தளாயுடன் இணைந்த சிங்களப் பெரும்பான்மைமக்கள் உள்ளமாவட்டத்தை உருவாக்கலாம். கொரவப்பொத்தானை, பன்குளம் பிரதேசங்கள் தனிச்சிங்கள இடமாக்கப்படலாம். கல்குடாவை பொலநறுவையுடன் இணைத்து சிங்களப்பிரதேசமாக்கலாம். ''வவனியா, முல்லைத்தீவு மக்களை வெளியேற்றி அகதிகளாக்கலாம். வடக்கு-கிழக்கை இணைக்கமுடியாத நடவடிக்கைகளை இதன்மூலம் செயற்படுத்தலாம். எனவே மக்களின் எதிர்ப்பு மேலும் அரசுக்கு ஏற்படும்வேளை இராணுவத்தாக்குதலை மேற்கொள்ள அரசு தயங்கப்போவதில்லை.

''சர்வமதச ரீதியான முற்போக்கு சக்திகளின் ஆதரவு எமது அமைப்புக்கு என்றும் உண்டு எமது போராட்டம் இடைநிறுத்தப்படத்தக்கதொன்றல்ல. தமிழ்மக்களின் பாதுகாப்புக்கு உண்மையான உத்தரவாதம் அளிக்கும் பட்சத்தில் 'இடைக்காலத்தீர்வு' ஒன்றை ஏற்பது பற்றி எமது அமைப்பு பரிசீலனை செய்யலாம். எனினும் நாட்டிலே தேர்தல் நடக்குமென்ருே அத்தேர்தல் அமைதியாக நடக்குமென்ருே இன்று கூறுவது சிரமம்''. (ஐ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

## மரண அறிவித்தல்
### நாகநாதர் தம்பிப்பிள்ளை

புங்குடுதீவு 10ம் வட்டாரம் பொன்னுந் தோட்டம் நாகநாதர் தம்பிப்பிள்ளை காலமானுர். இவர் காலஞ்சென்ற தங்கத்தின் அன்புக் கணவரும், தவநிதி, கிருபைமணி, இராஜேந்திரலிங்கம் (கனடா) ஆகியோரின் தகப்பனுரும், செல்லத்துரை, வரதராஜா, லீலாவதி ஆகியோரின் மாமனுரும், சசிகலாதேவி (சுவிஸ்), கிருஸ்ணராஜா (சுவிஸ்), சிவலோகநிதி, சுசிகலாதேவி, வனஜா, சுவேதா, ஜலங்சன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18-01-86) பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று பணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் தயை கூர்ந்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்; வை. செல்லத்துரை
மருமகன்.

(C 261)

## மரண அறிவித்தல்
### சரவணமுத்து முத்துச்சாமி
(முன்னுள் சாமுவேல் அன்சன்ஸ் முகாமையாளரும், இன்சூரன்ஸ் ஏஜன்டும்)

அரியாலையைச் சேர்ந்த திரு. ச. முத்துச்சாமி அவர்கள் காலமாகிவிட்டார் இவர் கமலாம்பிகையின் அன்புக்கணவரும், இரவீந்திரா (லண்டன்), ஜீவேந்திரா (இத்தாலி), பாலேந்திரா (பிரான்ஸ்), அனேஜா (குளோபல் இன்ஜினியரிங்), ஆனந்தி, சுபாஷினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னுரின் பூதவுடல் 11/1, செம்மணி ஒழுங்கையில் இருக்கும் அன்னுரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக 19-01-1986 (ஞாயிறு) காலை 9-00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

திருமதி முத்துச்சாமி

(C 252)

## மரண அறிவித்தல்
### திருமதி அன்னப்பிள்ளை சுப்பையா

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் தட்டாதெருவில் வசிப்பவருமான திருமதி அன்னப்பிள்ளை சுப்பையா காலமானுர்.

இவர் காலம் சென்ற ச. சுப்பையாவின் அன்புமனைவியும், பாலசுந்தரம்(A. O கச்சேரி யாழ்ப்பாணம்) தியாகராஜா நில அளவையாளர் Nigeria), கதிர்காமத்தம்பி (Supt) Engineer Peraideniya, Dept. of Agriculture) திருமதி மகேஸ்வரி பேரின்பநாயகம் மருந்தாளர் யாழ். அரசினர் போதனு வைத்தியசாலை), பத்மநாதன் (Vet. Surgeon Iran), திருமதி பரமேஸ்வரி பாலதேவர் (Vet. Office, சங்கானை) ஆகியோரின் அன்புத்தாயாரும் பா. திலகவதி, தி. கமலாதேவி, க. கமலாதேவி, பேரின்பநாயகம், வசந்தகுமாரி பாலதேவன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பாலசந்திரன், பாலேந்திரன் (Germany), பாமினி சங்கர், பாலரஜினி கமலினி, தியாகினி (யாழ் இந்து மகளிர் கல்லூரி) கோணேஸ்வரன் (யாழ். இந்துக்கல்லூரி), கிருசாந்தி, செந்தூரன், ஜெயநந்தினி, பிரியதர்சினி, ரஜீவ், சண்முகப்பிரியர், பிரதீபா ஆகியோரின் அன்புப்பேத்தியும் கந்தப்பிள்ளை, காலம் சென்ற சுந்தரத்தினதும் அன்புச் சகோதரருமாவார். அன்னுரது பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று 18-1-86 சனிக்கிழமை பிற்பகல் மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கேம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிருேம்.

C 265

## மரண அறிவித்தல்
### திருமதி மேரி. அம்பலவாணர்

திருமதி மேரி. அம்பலவாணர் காலமானுர். இவர் காலஞ்சென்ற திரு. லில்லி அரியநாயகம் அம்பலவாணரின் அருமை மனைவியுமாவார். நல்லடக்க ஆராதனை கொழும்புத்துறை புனிதர் யோசேப் முதியோர் இல்லத்தில் வெள்ளிக்கிழமை 17-1-86 காலை நடைபெற்று சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

[C 251]

## மரண அறிவித்தல்
### அன்னம்மா செல்லத்துரை

ஊர்காவற்றுறை நாரந்தனையைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை அன்னம்மா 17-1-86இல் காலமானுர். இவர் காலஞ்சென்ற யாக்கோப்பு செல்லத்துரையின் அன்பு மனைவியும், லூடா (குவைத்), றீட்டா, வினி பிறீடா, ஆகியோரின் அன்புத் தாயாரும், யோசேப், டேவிட் மரியாம்பிள்ளை (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் டெல்வின் (ஜேர்மனி), டென்சன், டெவிஜன், டெனிசா ஆகியோரின் அன்புப்பேத்தியும் ஆவார் அன்னுரின்பூதவுடல் 18-1-86 சனிக்கிழமை [இன்று] பிற்பகல் 4 மணிக்கு நாரந்தனை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: டேவிட் மரியாம்பிள்ளை,
நாரந்தனை.

[C 254]